# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தங்கட்கிழமை 06.12.2021 supeedsam.com supeedsam@gmail.com







## ஜனாதிபதி கிண்ணம் மட்டக்களப்பில்; முனைக்காடு இராமகிருஷ்ணா வசமானது



மட்டக்களப்பு கால்ப்பந்தாட்ட சம்மேளனம் 2021ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி கிண்ணம் என்று நடாத்திய மாவட்ட அ,ஆ பிரிவு அணிகளுக்கிடையிலான கால்ப்பந்தாட்ட போட்டியானது 27.10.2021 அன்று வெபர் மைதானத்தில் ஆரம்பமானது. மாவட்டத்தின் 20 அணிகள் பங்குபற்றிய Knock out முறையிலான இறுதி போட்டி நேற்றைய தினம் (04) இடம்பெற்றது. வரலாற்றில் படுவான்கரை பிரதேசத்தை பிரதிநித்துவப்படுத்திய அணிகளான முனைக்காடு இராமகிருஷ்ணா, கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா ஆகியவை இறுதிச்சுற்றில் பங்குபற்றியிருந்தது. போட்டி நேரம் முடிவுறும் வரை எந்த அணிகளும் வெற்றிக்கோள்களை செலுத்தாமையினால் தண்டனை உதைமூலம் முனைக்காடு இராமகிருஷ்ணா அணி வெற்றி பெற்றது.

2 ஆம் இடத்தை கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா அணி பெற்றதுடன், 4 ஆவது இடத்தினை முதலைக்குடா விநாயகர் அணியினர் பெற்று படுவான்கரை மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் உள்ள நிருவாகப் பயங்கரவாதம் என்பதன் அர்த்தம் என்ன?


### கேள்வியெழுப்புகின்றார் சிறிநேசன்



(எருவில் துசி)

மட்டக்களப்பில் நிர்வாகப் பயங்கரவாதம் நடைபெறுகிறதாம் என பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக தமிழ் மாவட்ட நிருவாகத்தை மையப்படுத்தியதாக இவரது கருத்து அமைந்துள்ளது.

இது உண்மையில் கண்டிக்கத்தக்க கருத்தாகும். அப்படிப் பார்த்தால் இந்த நிர்வாகப் பயங்கரவாதத்தால் எத்தனை உயிர்கள் இழக்கப்பட்டன?



02 ஆம் பக்கத்தில்...

## சாணக்கியனின் செயற்பாடு தமிழ் - முஸ்லிம் உறவில் திருப்பத்தை ஏற்படுத்தும்



(நமது நிருபர்)

இளம் அரசியல்வாதியான சாணக்கியன் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல் கொடுப்பது தமிழ் முஸ்லிம் உறவில் திருப்பத்தை ஏற்படுத்தும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்று

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் அதிகரிக்கும் கோரோனா தோற்று

### சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைபிடிக்கவும் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக்

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கோவிட் 19 கொரோனா தொற்று அதிகரித்து வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.



02 ஆம் பக்கத்தில்...

## ஈழமண்ணின் எதிர்காலம் தமிழ்நாட்டின் கையில்

### ஸ்ரீதரன் தெரிவிப்பு



(ஊர்காவலன்)

பாரத தேசத்தின் நம்பிக்கையினையும், அழுத்தத்தினையும் தமிழ் நாட்டிலே பிறந்த ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழிச்சிக்கும் இருக்கின்ற கடமையிலேயே ஈழத்து மண்ணின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இரத்தம் சிந்திய நாட்களை மன்னிப்போம்



(யாழ்.கீதன்)

கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய விடயங்களை மறக்க முடியாவிட்டாலும் மறந்து அதற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும்

02 ஆம் பக்கத்தில்...

## அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பி எதுவும் நடக்கப்போவதில்லை

### கூட்டமைப்புக்கு தினேஷ் அறிவுரை



(காந்தன்)

'தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே எமது அரசின் திட்டம்.அதைவிடுத்து அமெரிக்காவையும், இந்தியாவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை' என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தத்துக்கு பாரிய தொகை செலவழிக்கப்படுகிறது

முழு விபரம் 15 ஆம் பக்கத்தில்....

## நாட்டின் சில பகுதிகளில் சுழற்சி முறையில் 1 மணிநேரம் மின்வெட்டு!

(சுஜீத்)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பும் வரையில் நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின் வெட்டு நடைமுறைப் படுத்தப்படலாம் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இரவு 6 மணி முதல் 9 மணிக்கு இடைப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...






## பாகிஸ்தானில் கோலை செய்யப்பட்ட பிரியந்தவின் உடல் இன்று இலங்கை வருகிறது

பாகிஸ்தானில் சியால்கோட் பகுதியில் கலகக் கும்பலால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் சடலம் இன்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஊடாக அரச செலவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.



02 ஆம் பக்கத்தில்...

## அதிகரிக்கும் ஒமிக்ரோன் அச்சுறுத்தல்: பண்டிகை காலத்தில் நாடு முடக்கம்?

நாடு மீண்டும் முடக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டியில் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாவின் ஆபத்தான ஒமிக்ரோன் மாறுபாட்டின்

02 ஆம் பக்கத்தில்...











## குறிஞ்சாக்கேணி படகு விபத்து: மரணம் 8 ஆக உயர்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் எட்டாக உயர்ந்துள்ளது.

கிண்ணியா பெரியாற்று முனையைப் பிறப்பிடமாகவும் தற்போது குறிஞ்சாக்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.ஹாலிசா வயது (40) எனும் தாயே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அதி தீவிரசிகிச்சைப் பிரிவில்

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதி கிண்ணம் மட்டக்களப்பில்:
# முனைக்காடு இராமகிருஷ்னா வசமானது





## கிழக்கில் அதிகரிக்கும் கொரோனா தொற்று

அதனடிப்படையில் கடந்த ஒக்டொபேர் மாதத்தில் குறைவடைந்திருந்த covid19 நோயாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மாதத்தில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒக்டோபர் மாதத்தில் சராசரியாக கிழமைக்கு 600 தொடக்கம் 650 என்று நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வந்த நிலையில் நவம்பர் இறுதி பகுதியில் கிழமைக்கு 1000 கோவிட் 19 கொரோனா தொற்றாளர்கள் இனங்கான படுவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்

அம்பாறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளதாகவும் மாதாந்தம் செய்யப்படும் ஆண்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் இங்கணப்படும் நோயாளர்களின் வீதம் அடிப்படையில் ஒப்பிடும்போது செப்டம்பரில் 31வீதமாகவும் ஒக்டோபர் மாதத்தில் 21வீதமாகவும் குறைவடைந்து இருந்தது இது நவம்பர் மாதத்தில் மீண்டும் 31வீதமாக அதிகரித்து உள்ளது இது டிசம்பர் மாதம் இறுதிக்குள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்த கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக்

சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டிலும் ஓமிக்ரோன் வகை கோவிட் வைரஸ் தொற்று இனங்கானப்பட்டுள்ளது இது வேகமாக பரவக்கூடியது எனவும் இதனுடைய தாக்கத்தின் உடைய வேகமும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவும் மரணங்களின் வேகம் என்பன தொடர்பில் சரியான கணிப்புகள் இதுவரை கூறப்படவில்லை

எதிர்வரும் காலம் பண்டிகை காலம் என்பதினால் பொது மக்கள் தமக்கு தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் அடிக்கடி சொல்லப்படுகின்ற முக கவசத்தை சரியாக அணிந்து கொள்வதும்,சமூக இடைவெளிகளை பேணி,அடிக்கடி கைகளை கழுவிக் தற்பாதுகாப்புகளை எடுத்துக் கொள்வது அவசியமாகும். அத்தோடு அனாவசியமான பாதுகாப்பற்ற நெருக்கடியான ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்,விசேடமாக மரண வீடுகளில்,மங்கள திருமண நிகழ்ச்சிகள்,சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய ஆராதனைகள் என்பவற்றில் ஒன்று கூடுவதும்,பண்டிகை காலங்களில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காக நெருக்கடியான முறையிலே ஒன்று கூடுவதும் இந்தக் கட்டங்களில் சுகாதார அமைச்சினால் அறிவுறுத்தப்படும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் எம்மை பாதுகாத்து கொள்ளலாம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்

மேலும் கொரோனா தடுப்பு மருந்தை தவறாமல் பெற்றுக்கொள்வது அவசியமாகும் கிழக்கு மாகாணத்தில் 95 வீதம் 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு முதலாவது தடுப்பு மருந்தும் 85 வீதமானவர்களுக்கு இரண்டாவது கொரோனா தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது.மேலும் 16 மற்றும் 20 வயதுடையவர்களுக்கு பைசர் தடுப்பு மருந்து 95வீதமானர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

## சாணக்கியனின் செயற்பாடு தமிழ் - முஸ்லிம் உறவில் திருப்பத்தை

இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எடுத்துவரும் முயற்சிகளையும் அவரது நல்ல சிந்தனைகளையும் தான் வெகுவாகப் பாராட்டுவதாக தெரிவித்துள்ளார்.

அதேநேரம் அவர் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல் கொடுப்பதால் குறுகிய மனமுள்ள சிலர் அவரது போக்கை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றார்கள் அது வருத்தமளிக்கின்றது.

அவரைப் போன்றே மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்தும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

ஈஸ்ரர் தாக்குல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

பாரிய அபாண்டத்தைச் சுமத்தினார்கள். முஸ்லிம் சமூகத்தின் மீது அபகீர்த்தியும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது.

ஆனால் இப்பொழுது தாங்கள் கொண்டிருந்த அந்த நிலைப்பாட்டை சிங்கள மக்கள் மாற்றிக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை அனுதாபத்தோடு நோக்கத் துவங்கியிருக்கிறார்கள்.

நடந்த தவறான அபிப்பிராயத்துக்காக அவர்கள் வருந்துகிறார்கள். அந்தத் தாக்குதலில் முஸ்லிம் சமூகம் சம்பந்தப்படவில்லை என்பதையும் இது அரசியலை அடைவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

அதேவேளை கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டி வளர்க்காமல் தவறு விட்டிருக்கின்றார்கள்.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இப்போது அரசியலுக்குள் நுளைந்துள்ள புதிய அரசியல்வாதிகள் புதிய போக்கிலே சிந்தித்து சந்தேகங்களை நீக்க வேண்டும்.

மக்களை சிறந்த முறையில் வழிநடத்த வேண்டும். தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை வலுப்பெறச் செய்ய வேண்டும் என எம்.எஸ். சுபைர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.




## குறிஞ்சாக்கேணி படகு விபத்து; மரணம் 8 ஆக

சிகிச்சை பெற்று வந்த நிலையில்12 நாட்களுக்குப் பின்னர் 04 ஆம் திகதி இரவு 9:00 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்து உயிரிழந்துள்ளார்.படகு விபத்தின் போது இத்தாயின் மகனான பரீஸ் பஹிர் (வயது06) அன்றைய தினமே மரணித்தமை குறிப்பிடத்தக்கது

## இரத்தம் சிந்திய நாட்களை மன்னிப்போம்

என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டுமென முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர், தனியார் விடுதியில் இடம்பெற்ற 43 படையணியின் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடலுக்குப் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தவர்கள் எம்முடன் மீண்டும் இணைந்து கைகோர்க்க வேண்டும். கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய விடயங்களை மறக்க முடியா விட்டாலும் மறந்து அதற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்.

சிங்கள மக்கள் பெருவாரியான வாக்குகளை தற்போதைய ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தார்கள். ஆனாலும் தற்போது அதே சிங்கள மக்கள் அவரை வெறுக்கின்றார்கள். ஜனாதிபதித் தேர்தலில் 2023 ஆம் ஆண்டு இடம் பெறும். அந்த நேரத்தில் நேர்மையான துஷ்பிரயோகத்திற்கு எதிராக செயற்படுகின்ற ஒருவர் களமிறக்கப்படுவார்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சொல்வதை தான் செய்வோம் செய்வதைச் சொல்வோம் எங்களுடன் நீங்களும் கைகோர்க்க வேண்டும். 43 படையணியை நீங்கள் படையணியாக கருதக்கூடாது எதிர்காலத்தில் அரசியலில் வியூகங்களை வகுக்க உருவாக்கப்பட்ட அமைப்பே இதுவாகும்.1943 இல் நமக்கு கிடைத்த இலவசக் கல்வியை அடிப்படையாக கொண்டு 43 படையணி இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆகவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல எம்முடன் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றார்.

## அதிகரிக்கும் ஓமிக்ரோன் அச்சுறுத்தல்; பண்டிகை

பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய மாறுபாடு குறித்து நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். எனவே முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்ட பிரியந்தவின்

சடலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவரது அடுத்த நிலை உறவினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். வெளிநாட்டு அமைச்சு இந்த விடயத்தை ஒருங்கிணைத்து வருகின்றது.

தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கை ஒன்றை வழங்குமாறு இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளது.

இழப்பீடுகளை வழங்குவது தொடர்பில் பாகிஸ்தான் அதிகாரிகள் மற்றும் இறந்தவரின் தொழில் தருனருடன் வெளிநாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றது.

## நாட்டின் சில பகுதிகளில் சுழற்சி முறையில்

காலப்பகுதியில் ஒரு மணித்தியால மின்வெட்டு ஏற்படக்கூடும்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பிரதான மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்பட்டது.

எவ்வாறாயினும், சுமார் 6 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மின் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அமைப்பில் ஏற்பட்ட சமநிலையின்மை காரணமாக நேற்றுமுன்தினம் இரவு வரை நாட்டின் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனினும், நேற்றுக் காலைக்குள்மின்சார விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பியுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனைத்து துணை மின்நிலையங்களும் தற்போது மின் விநியோகத்தில் இருந்தாலும், நுரைச்சோலை அனல் மின் நிலையம் இன்னும் செயல்படாமல் உள்ளது. அதன் 3 இயந்திரங்கள் செயலிழந்தன.

அதில் ஒன்றை உடனடியாக சீரமைத்து, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து தேசிய மின் அமைப்பிற்கு 300 மெகாவோட் மின்சாரத்தை சேர்க்க எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. மீதமுள்ள 600 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் அமைப்புடன் சேர்க்க இன்னும் மூன்று நாள்கள் ஆகும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பி எதுவும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு மக்கள் ஆணையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இருக்கின்றார், பிரதமர் இருக்கின்றார். அதுமட்டுமன்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான அரசு உள்ளது.

இந்த மூன்று தரப்பினரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாக உள்ளனர்.ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் நினைத்த மாதிரி செயற்படுகின்றனர்.

அவர்கள் வெளியகத் தீர்வை விரும்புகின்றனர்.அதனால் தான் அவர்கள் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஓடித் திரிகின்றனர்.

உள்நாட்டுப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வே அவசியம்.அதைவிடுத்து வெளியகத் தீர்வைப் பெற முயற்சிப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும் எனவும் இதன்போது தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் உள்ள நிருவாகப் பயங்கரவாதம்

எப்படியான அழிவுகள் ஏற்பட்டன? என்பது பற்றிய விபரங்கள் அறியப்பட வேண்டும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. சிறிநேசன் குறிப்பிட்டுள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் முதலமைச்சராக இருக்கும் வரை தமிழர்களிடம் செழிப்பு முகம் காட்டிய இவர் தற்போது தமிழ் நிருவாகிகள் விடயத்தில் சுழிப்பு முகம் காட்டுகிறார். ஏறாவூர்ப் பிரதேச சபையில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நம்மவரிடம் உதவிகளைப் பெற்று விட்டு வாழைச்சேனையில் த.தே. கூட்டமைப்பு ஆட்சியமைப்பதில் காலைவாரிய இவரை இன்னும் நம்புவதற்கு யாரும் நண்பர்கள் நம்மிடம் இருக்க மாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

இவரது கருத்தினை மட்டக்களப்பு நிருவாகிகள் சங்கம் கண்டித்ததாகத் தெரியவில்லை என சிறிநேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈழமண்ணின் எதிர்காலம் தமிழ்நாட்டின் கையில்

தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு வன்னியரசின் தந்தை இரத்தினசாமியின் நினைவு நாளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாங்கள் இன்று நிலம் அற்றவர்களாகவும், மொழி அற்றவர்களாகவும் இருக்கின்றோம். அதாவது எமது மொழி பறிக்கப்படுகின்றது.எமது நிலம் பறிக்கப்படுகின்றது.நாம் வாழ்ந்த வரலாறு பறிக்கப்படுகின்றது. அதற்கும் மேலாக வாழும் உரிமையைக்கூட இழந்துகொண்டு இருக்கின்றோம். இவ்வளவு நெருக்கடிக்கும் மத்தியிலேயே எமது மக்கள் வாழ்கின்றனர் .

ஈழத் தமிழர்களிற்கு ஒரு விடுதலை என்றால், ஈழத் தமிழர்கள் நிம்மதியான சுயாட்சி என்றால் பாரத தேசத்தின் அமைப்பிலும் பாரத தேசத்தின் அரவணைப்பிலும் நம்பிக்கையிலுமே தங்கியுள்ளது.நாங்கள் எப்போதுமே இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல.

அல்லது பாரத தேசத்திற்கு எதிரானவர்கள் அல்ல, நாங்கள் இந்தியாவின் பாதுகாவலர்களாக இருக்கவே விரும்புகின்றோம்.

அந்நிய சக்திகள் இந்தியாவிற்குள் ஊடுருவ முயன்றால் அல்லது இந்தியாவிற்கு களங்கம் ஏற்படுத்த முனைந்தால் அதனை பாதுகாக்கின்ற சக்தியாக எப்போதும் ஈழத் தமிழர்கள் இருப்பார்கள். அதனால் தான் எங்கள் இருப்பும் உங்கள் பாதுகாப்பும் பிண்ணிப் பிணைந்த ஒன்று என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

# வாகரை ஓமடியாமடுவில் தேரர் யானைவெடியை வேடிக்க வைத்தில் இளைஞன் பலி

## காயமுற்ற தேரர் வைத்தியசாலையில்; பலர் கைது

(க.ருத்திரன்)





மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பிரதேசமான வாகரை ஓமடியாமடுவில் பன்சாலை ஒன்றில் இடம்பெற்ற யானைவெடி வெடிப்பு சம்பவமொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் காயமுற்ற தேரர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

நாகஸ்த்தன வெலிக்கந்தவைச் சேர்ந்த சிசிரகுமார வயது (27) என்ற இளைஞ்ஞனே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் பற்றி தெரியவருவதாவது வியாழக்கிழமை இரவு ஓமடியாமடு சுதுகல ஆரன்னிய பன்சாலையின் முதியலங்கார சுபாத்தாலங்கார தேரருடன் சேர்ந்து 8 பேர்கள் தங்கியுள்ளனர்.இதன்போது வெடிச்சத்தம் கேட்டதாகவும் பின்னர் பலர் சத்தமிடும் சத்தம் கேட்டதாகவும் சம்பவம் என்னவென்று அறிய அருகில் வயல் செய்கையில் இரவு நேர காவலில் ஈடுபட்டவர்கள் சிலர் சென்று பார்த்தபோது இளைஞன் ஒருவர் வயிற்றுப் பகுதியில் காயத்துடன் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

இதன்போது அங்கிருந்த தேரருக்கு கைகள் இரண்டிலும் மற்றும் கால் பகுதியில் காயமேற்பட்டு காணப்பட்டதாகவும் தெரிவித்தனர்.பின்னர் வாழைச்சேனை பொலிசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் தேரர் உட்பட அங்கு தங்கியிருந்த ஏனைய 6 பேர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தேரருக்கும் உயிரிழந்த நபருக்குமிடையில் இடம்பெற்ற கருத்து மோதல் காரணமாக கோமடைந்த தேரர் யானை வெடியினை எடுத்து கொழுத்தி சிசிரகுமராவின் வயிற்றுப் பகுதியில் வெடிக்க வைத்துவிட்டு காட்டுப் பகுதியில் தப்பி ஓடி ஒழிந்து கொண்டதாகவும் விசாரணைகளின் போது தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தேரர் கடந்த காலத்தில் இராணுவத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.குறித்த தேரரின் நடவடிக்கைகள் பௌத்த மத பண்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக காணப்பட்டதாகவும் மது போதையின் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிரதேச வாசிகள் கருத்து தெரிவித்தனர்

சும்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட மட்டக்களப்பு மாவட்ட வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி இ.சிகாப்தின் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தினை உடற் கூற்றாய்விற்காக சட்ட வைத்தியரின் அறிக்கைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறு பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.வாழைச்சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இறுதிச்சடங்கு செய்ய மயானம் இல்லாத அவலநிலை

## இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை கறுக்காமுனை கிறிஸ்தவர்கள் சிரமத்தில்





(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலைவெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கறுக்காமுனை பகுதியில் கிறிஸ்தவர்கள் மரணித்தால் அடக்கம் செய்வதற்கு மயானம் இல்லை எனவும் அதனைப் பெற்றுத் தருவதற்குறிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வெருகல் பிரதேசத்தில் பொது மயானம் இருந்தபோதிலும் இந்து மயானம் என பெயரிடப்பட்டு இந்து மக்களது பூதஉடல்கள் மாத்திரம் அடக்குவதற்கு அனுமதி வழங்குவதாகவும் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர்கள் மரணித்தால் அவர்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும் அப்பிரதேச கிருஸ்தவ மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நேற்று சுகவீனமுற்ற கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நல்லடக்கம் செய்வதற்கு பொது மயானத்தில் இந்து மக்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை எனவும் இதனால் அக்குடும்பம் பல துன்பங்களை எதிர்நோக்கியதாகவும் தெரியவருகின்றது.

கடந்த 15வருடங்களுக்கு மேலாக வெருகல் பிரதேசத்தில் கறுக்காமுனை, விநாயகபுரம், ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறை முகத்துவாரம், வட்டுவான் மற்றும் மாவடிச்சேனை போன்ற பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர்கள் வாழ்ந்து வருவதாகவும் கிறிஸ்தவர்கள் மரணித்தால் கிறிஸ்தவர்களது பூதவுடல் நல்லடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தங்களுடைய மத சுதந்திரத்தை பெற்றுத் தருமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

இருந்தபோதிலும் கிறிஸ்தவர்கள் மரணித்தால் அவர்களை நல்லடக்கம் செய்வதற்கு இந்து முறைப்படி செய்தால் மாத்திரமே அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குவதாகவும், இதனால் தங்களுடைய மத சுதந்திரம் மறுக்கப் படுவதாகவும் கவலை தெரிவிவிக்கின்றனர்.

வெருகல் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் கிருஸ்தவ மக்களின் நலன் கருதி மயானம் ஒன்றினை பெற்றுத் தருமாறு பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைத்தலைவர் உட்பட அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வித நடவடிக்கையினையும் எடுப்பதாக இல்லையெனவும் குற்றம் சுமத்துகின்றனர்

எனவே கிறிஸ்தவ மதத்தவர்கள் மரணித்தால் அவர்களை புதைப்பதற்காவது மயானம் ஒன்றினை பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இவ் மயான இடப்பற்றாகுறையினால் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையினை உருவாக்கிவிடாமல் தமக்கென ஒரு மயானத்தினை பெற்றுத்தருமாறு கிறிஸ்தவ மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு







(தலவாக்கலை பி.கேதீஸ்)

வைஷ்ணவி நற்பணி மன்றத்தினூடாக யட்டியந்தோட்டை பாரதி தமிழ் வித்தியாலய பாடசாலையின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

# பேண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம்



(க.கிஷாந்தன்)



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து மலையகத்தில் பல பாகங்களில் பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம் எனும் தொனிப்பொருளில் புரொடெக்ட் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வுகள் நோர்வூட் நகரில் நேற்று 05.12.2021 இடம்பெற்றது.

பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் .அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் நோர்வூட் நகரில் வீதி நாடகமும், விழிப்புணர்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அரச சார் பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் .அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறார்கள் என பலரும் கொண்டனர்.

# நிந்தவூரில் தெய்வீக சிறுவர் திட்டத்தின்கீழ் அறநெறிமாணவர்க்கு கற்றலுபகரணங்கள்!







(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெய்வீக சிறுவர் திட்டத்தின் கீழ், நிந்தவூர் கிராமத்தில் இயங்கும் சிவமுத்துமாரியம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெய்வீக சிறுவர் திட்டத்தின் ஊடாக பின்தங்கிய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கும் திட்டம் நாடளாவியரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

கற்றல் செயற்பாட்டினை முன்னெடுக்கும் வகையில் கற்றல் உபகரணம், புத்தகப்பை ,அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வானது நேற்றுமுன்தினம் நிந்தவூர் ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய அறநெறிப்பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு திருமுன்னிலை அதிதியாக சிவஸ்ரீ பத்மலோஜன் சர்மா கலந்து கொண்டதுடன் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் பிரதமஅதிதியாக கலந்து சிறப்பித்தார்.

விநாயகர் அறநெறிப்பாடசாலை மற்றும் அறநெறிப்பாடசாலைமாணவர்கள் ,பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

அறநெறி விழிப்புணர்வு பதாதைதிரை நீக்கம், அறநெறிப் பாடசாலை மாணவருக்காக வெளியிடப்பட்ட நூல்கள் கண்காட்சி, மற்றும் கைப்பேணிப் பொருட்கள் கண்காட்சியும்இடம்பெற்றது.

மாவட்டசெயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வினை, மாவட்டச்செயலக இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.பிரதாப்நிகழ்த்தினார்.




வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF


IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44
மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch
Subash
Basmati Rice
RED LENTILS
ROTE LINSEN
Tilda

# கோவிட் தோற்று காரணமாக மாணவர்கள் இழந்த கல்வியை பெறுவதற்கு அதிபர்கள்,ஆசிரியர்களுக்கு பாரிய போறுப்பும் இருக்கின்றது





(வி.சுகிர்தகுமார் )

நாட்டிலே கொவிட் தொற்று காரணமாக மாணவர்கள் இழந்த கல்வியை பெறுவதற்கு அதிபர்கள்,ஆசிரியர்கள்,கவனம் செலுத்தும் அதேநேரம் அவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பும் இருக்கின்றது. இதன் மூலம் மாணவர்கள் இழந்த கல்வியை மீண்டும் பெறக்கூடிய வாய்ப்புள்ளது என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

எமது நாட்டைச் சேர்ந்த புலம்பெயர் சமூகத்தின் இலத்திரணியல் கல்வி திறன் தொண்டு நிறவனத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பிலும், குறித்த நிறுவனத்தின் ஏற்பாட்டிலும் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட அக்கறைப்பற்று கண்ணகிகிராமம் கண்ணகி வித்தியாலயத்தில் முதல் முறையாக அமைக்கப்பட்ட கல்வி திறன் வகுப்பறைத் திறப்புவிழாவில் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதிபர் த.இராசநாதன் தலைமையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற நிகழ்வில் விஷேட அதிதியாக திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன்சிறப்பு அதிதிகளாக இலத்திரனியல் கல்வி தொண்டு நிறவனத்தின் தலைவர் செ.முரளிதரன், செயலாளர் கலாநிதி கு.கணேசன்,திருக்கோவில் கல்வி வலயத்தின் இணைப்பாளர் கலாநிதி.வாசுதன் செல்லத்துரை,கிழக்கு மாகாண இணைப்பாளர் சா.சுதாகரனும், ஆலையடிவேம்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி எம்.மயூரன், அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்விற்கு வருகைதந்த அதிதிகளை மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். பின்னர் பிரதம அதிதி உள்ளிட்டவர்கள் இணைந்து கல்வி திறன் வகுப்பறைத் திறந்து வைத்தனர். பின்னராக ஒன்லைன் கற்கை நெறி மூலமான பாடத்திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் கண்டு களித்தனர்.

இங்கு மாகாண கல்விப்பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்...

எமது சமூகம் சார்ந்த பாடசாலைகள் பல கஸ்டப்பிரதேசங்களிலும்,வளங்கள் குறைவாகவும் காணப்படுகின்றது.பெற்றோர்களினதும்,சமூகத்தின் ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் பாடசாலைகள் நடைபெறுகின்றது.எமது சமூகத்தின் இன்றைய கட்டாயத் தேவையாக கல்வி திகழ்கின்றது. கல்வியை தொடர்ச்சியாக கற்பதன் மூலம் எமது சமூகத்தின் இழப்புக்கள் பலவற்றை மீண்டும் நிவர்த்தி செய்ய முடியும்.நாட்டிலே இரண்டு வருடங்களாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது.இவ்வாறு இழந்த கல்வியை நிவர்த்தி செய்வதற்கு எமது சமூகம் சார்ந்தவர்கள்,நிறுவனங்கள்,புத்திஜீவிகள் எம்முடைய சமூகத்தின் கல்வித்தேவைக்காக உழைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.இலத்திரணியல் கல்வி தொண்டு நிறுவனத்தினரின் உதவிகள்,ஒத்தாசைகளை நான் பாராட்டுகின்றேன்.எமது சமூகத்தின் உயிர்நாடியான கல்வியை குறித்த நிறுவனத்தினர் செய்யும் நல்லெண்ணங்களால் எம்முடைய மாணவர்கள் கல்வியில் சாதனை படைக்கின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளை பார்க்கும் போது நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று திறன்வகுப்பறைகள் திறக்கப்படுகின்றது.இதன்மூலம் திறன் கல்வியை ஆசிரியர்கள் சரியான பாதையில் மாணவர்களுக்கு ஊட்டிவிட்டு கல்வியில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ள முடியும்.இதன்மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மேன்மையடையும்.இன்னும் சில மாதங்களின் பின்னர் க.பொ.தா உயர்தரப்பரீட்சை மற்றும் புலைமைப் பரீட்சைகள் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இவ்வாறான பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைவதற்கு ஆசிரியர்கள்,வகுப்பாசிரியர்கள் கவனம் செலுத்தி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.இதன் மூலம் மாணவர்கள் இழந்த கல்வியை பெறக்கூடிய வாய்ப்பாகவுள்ளது எனத்தெரிவித்தார்.

# மட்டக்களப்பு அருவி பேண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் பேண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதோழிக்கும் நடைபவனி








(மட்டு துஷாரா)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயற்பாட்டு வாரத்தில் கடின உழைப்பினால் முன்வந்த பெண்களைகௌரவிக்கும் நிகழ்வும் நடைபவனியும் (03) மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வருடாவருடம் கார்த்திகை 25 தொடக்கம் மார்கழி 10ஆம் திகதி வரை சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண்களை விழிக்கும் தினங்களில் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக பெண்களுக்கு தேவையான சட்ட விழிப்புனர்வு, ஆளுமை விருத்தி செயற்பாடுகள் மற்றும் கௌரவிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில், கடின உழைப்பினால் முன்வந்த பெண்களை கௌரவிக்கும் முகமாகவும் அவர்களது உரிமை சார்ந்த விடயங்களை வெளிக்கொண்டுவரும் முகமாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

குறித்த நிகழ்வு மட்டக்களப்பு தன்னாமுனை மியானி வளாகத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றதோடு பொலிஸ் பிரிவு, வைத்திய பிரிவு, விளையாட்டுதுறை, சமையல்துறை, பாதுகாப்புத்துறை இவற்றில் பணிபுரியும் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றதனைத் தெடர்ந்து கலந்து கொண்ட அதிதிகளையும் கௌரவித்து நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வு நடை பவணி தன்னாமுனை மியானி வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி மட்டக்களப்பு பேருந்து நிலையம் வரை சென்று விழிப்புணர்வு வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருனாகரன், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந், மட்டக்களப்பு போதன வைத்தியசாலை பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசலிங்கம், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன், மன்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன், மன்முனை பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம், சிறுவர் மற்றும் மகளீர் பொலிஸ் பொறுப்பதிகாரி சுசிலா, ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பணிப்பாளர் கண்டுமனி லவகுசராசா, அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், அரசதிணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமமட்ட பெண்கள் குழுக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் உள்ள அனைத்து சிவில் சமூகங்களும் ஒருமித்து அணிதிரள வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா

(ரக்ஸனா)

மட்டக்களப்பில் உள்ள அனைத்து சிவில் சமூகங்களும் ஒருமித்து அணிதிரள வேண்டும். தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா.

மட்டக்களப்பில் வாழும் அனைத்து சிவில் சமூகங்களும் அநீதிகளுக்கெதிராகவும் தமது உரிமைகளுக்காகவும் அணிதிரண்டு ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றிப்பு நிகழ்வு மட்டக்களப்பு கூட்டுறவு கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 05.12.2021 இடம்பெற்றது.

மாவட்ட சர்வ மத அமைப்பின் சார்பாக ஹர்ஷாயினி மனோகரன் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.



நிகழ்வில் மாவட்ட சர்வமத அமைப்பின் அங்கத்தவர்கள் மதத் தலைவர்கள் செயற்பாட்டாளர்கள் உட்பட தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் சமன் செனவிரத்ன நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ரஷிகா செனவிரத்ன அலுவலர் அயேஷா ஜெயவர்தன உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நிகழ்நிலை தொழினுட்பத்தினூடாக மாவட்ட சர்வமத உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா சிவில் சமூக அமைப்புக்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதோடு சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பதுடன் மக்களுக்கும் இது தொடர்பில் அவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் விடயங்களை எத்தி வைக்க வேண்டும்.

அரசியமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அரசியலமைப்புச்சட்டமென்பது அதி உச்சதரத்திலான அரசியல் சட்டமாகும்.

அது மக்களுடைய பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும். இந்த அரசியலைமப்புச் சட்டத்தை மாற்றுகின்றபொழுது இரண்டு முக்கியமான விடயங்கள் இருக்கின்றன என்பதை மக்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். அதிலே முதலாவது விடயம் ஜனாதிபதியிடம் உள்ள அதிகார பலத்தை நாங்கள் பரீட்சித்து சமப்படுத்த வேண்டியிருக்கின்றது.

19வது அரசியல் சீர்திருத்தத்திலிருந்து 20வது சீர்திருத்தத்திற்கு வந்துள்ளோம். இந்த 20வது சீர்திருத்தத்திலேயே ஜனாதிபதிக்கு மிக அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எந்தவொரு அதிகாரியை நியமிப்பதற்கும் எந்தவொரு அரச அதிகாரியை நீக்குசுவதற்கும் ஜனாதிபதியால் முடியும்.

நீதியினூடாக சிவில் சமூகம் பலாபலன்களை அடைந்து கொள்ள முடியும் என்கின்ற போதிலும் அதிலும் பலவீனங்களும் அதிகாரபலமில்லாத நிலையும் காணப்படுகின்றது. எனவே இந்த விடயங்கள் குறித்து சிவில் சமூகம் இன்னமும் இறுக்கமாக ஐக்கியப்பட்டு உறுதிப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்றார்.

# 163 பயனாளிகளுக்கு வாழ்வாதார போருட்கள் வழுங்கி வைப்பு

(ந.குகதர்சன்)

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக சௌபாக்கியா வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பதினான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் 163 பயனாளிகளுக்கு வாழ்வாதார பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான ஹாபிஸ் நசீர் அஹமட் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வாழ்வாதார பொருட்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் ஏறாவூர் நகரசபை தவிசாளர் எம்.ஐ.தஸ்லிம், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்



பாளர் எச்.எம்.றுவைத், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ருமைஸ், பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து கொணடனர்.

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சம் குடும்பங்களை மேன்படுத்தும் திட்டத்தில் தையல் இயந்திரம், மாசி உற்பத்தி மற்றும் மீன் சந்தைப்படுத்தல் வசதிக்காக குளிர்சாதன பெட்டிகள் போன்ற வாழ்வாதார பொருட்கள் மக்கள் பங்களிப்புடன் ஒரு குடும்பத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா வீதம் 163 பயனாளிகளுக்கு கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் வழங்கி வைக்கப்பட்டது.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் யார்?

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் யார் என்ற கேள்வி தற்போது மட்டக்களப்பு நகர மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மட்டக்களப்பு மாநகர ஆணையாளராக கடமையாற்றிய கே.சித்திரவேல் ஆளுநரின் 2020.12.03 திகதியிடப்பட்ட கடித்தின் பிரகாரம் இடம்மாற்றம் செய்யப்பட்டு 0%.12.2020 இல் மா.தயாபரன் மாநகர ஆணையாளர் கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.அதன்பின் கிழக்கு மாகாண ஆளுநரின் G/EPC/A/GVR/ Appt(268) 30.11.2021 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் எந்திரி என்.சிவலிங்கம் கடந்த இரண்டாம் திகதி கடமையினை பொறுப்பேற்றுக்கொண்ட போதிலும் புதிய ஆணையாளர் அங்கு கடமையில் இல்லையெனவும் பழைய ஆணையாளரே கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்படும். மா.தயாபரன் அவர்கள் முன்னாள் ஆணையாளரே தவிர தற்போது அவர் ஆணையாளர் இல்லையெனவும் அவர் தொடர்ந்து பணியாற்ற தங்களுக்கு எதுவித அறிவுறுத்தல்களும் கிடைக்கவில்லையென மாநகர சபை நிருவாகம் தெரிவித்துள்ளது.

---

අනුරාධ යහම්පත්
அநுராதா யஹம்பத்
Anuradha Yahampath
නැගෙනහිර පළාත් ආණ්ඩුකාරවර
கிழக்கு மாகாண ஆளுநர்
Governor of the Eastern Province

My No: G/EPC/A/GVR/Appt (268) November 30, 2021

Mr.N.Sivalingam
SLAS Class I

**APPOINTMENT AS MUNICIPAL COMMISSIONER, MUNICIPAL COUNCIL, BATTICALOA IN THE EASTERN PROVINCIAL COUNCIL**

By virtue of the powers vested in me under the Section 32(1) of the Provincial Councils Act 42 of 1987, I am pleased to appoint you as the **Municipal Commissioner, Municipal Council, Batticaloa in the Eastern Provincial Council** with effect from **01st December, 2021.**

You are hereby authorized to perform the functions associated with this post in strictly compliance with the governing laws, rules, regulations orders and procedures enacted by the Public Service Commission, detailed delegation of functions and authority shall be issued to you under PFR 150 of the Provincial Financial Rules, EP.

Anuradha Yahampath
Governor
Eastern Province

Copies to:
1. Chief Secretary, EPC -f.i.
2. Secretary, Chief Ministry, EPC -f.i.
3. Secretary, Ministry of Education -f.i
4. Commissioner of Local Government, EPC -f.i
5. Commissioner, Municipal Council, Batticaloa -f.i
6. Provincial Director, Department of Education, Eastern Province -f.i
7. ... -f.i.
8. Asst. Auditor General, Trincomalee -f.i.
9. Mr.M.Thayaparan, Municipal Commissioner of Batticaloa - Your appointment letter No: G/EPC/A/GVR/Appt (254) dated 03.12.2020 is hereby revoked, please.

026 - 2222320 026 - 2222102

---

Mr.N.Sivalingam,
Municipal Commissioner,
Municipal Council,
Batticaloa.
02.12.2021

Hon.Governor,
Eastern Province.

Chief Secretary,
Eastern Province,

Secretary,
Chief Ministry,
Eastern Province,

Commissioner of Local Government,
Eastern Province, - Through,

**APPOINTMENT AS MUNICIPAL COMMISSIONER, MUNICIPAL COUNCIL OF BATTICALOA IN THE EASTERN PROVINCIAL COUNCIL.**

This has reference to the Appointment Letter No: G/EPC/A/GVR/Appt(268) dated 30.11.2021 issued by the Hon. Governor of the Eastern Province.

I have the honour to inform you that I have assumed my duties as Municipal Commissioner of Batticaloa today on 02.12.2021.

Yours Sincerely,

N.Sivalingam
Municipal Commissioner.

Copy :-
1. Secretary to the Hon.Governor, Eastern Province. - f.i.
2. Chief Secretary, EPC. - f.i.
3. Secretary, Chief Ministry, EPC. - f.i.
4. Secretary, Ministry of Education, EPC. - f.i.
5. Commissioner of Local Government, EPC - f.i.
6. Provincial Director, Department of Education, Eastern Province - f.i.
7. Chief Internal Auditor, EPC - f.i.
8. Asst. Auditor General, Trincomalee - f.i.

---

අනුරාධ යහම්පත්
அநுராதா யஹம்பத்
Anuradha Yahampath
නැගෙනහිර පළාත් ආණ්ඩුකාරවර
கிழக்கு மாகாண ஆளுநர்
Governor of the Eastern Province

My No: G/EPC/A/GVR/Appt (254) December 03, 2020

Mr. M. Thayaparan
SLAS Class I

**APPOINTMENT AS MUNICIPAL COMMISSIONER, MUNICIPAL COUNCIL, BATTICALOA IN THE EASTERN PROVINCIAL COUNCIL**

By virtue of the powers vested in me under the Section 32(1) of the Provincial Councils Act 42 of 1987, I am pleased to appoint you as the **Municipal Commissioner, Municipal Council, Batticaloa in the Eastern Provincial Council** with effect from **07th December, 2020.**

You are hereby authorized to perform the functions associated with this post in strictly compliance with the governing laws, rules, regulations orders and procedures enacted by the Public Service Commission, detailed delegation of functions and authority shall be issued to you under PFR 150 of the Provincial Financial Rules, EP.

Anuradha Yahampath
Governor
Eastern Province

Copies to:
1. Chief Secretary, EPC -f.i.
2. Secretary, Chief Ministry, EPC -f.i.
3. Commissioner of Local Government, EPC -f.i
4. Chief Internal Auditor, EPC -f.i.
5. Asst. Auditor General, Trincomalee -f.i.
6. Mr. K. Chithravel, SLAS I - Your appointment letter No: G/EPC/A/GVR/Appt (220) dated 30.09.2018 is hereby revoked, please.

026-2222102 026-22223

# காயங்கேணி பகுதியில் குடிசையிலிருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

குடிசை ஒன்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி பகுதியிலுள்ள குடிசை ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் (4) பிற்பகல் மூன்று மணியளவில் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்காயங்கேணி பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சிவஞானம் குகேஸ் எனும் ஐந்து மாத பிள்ளையின் தந்தை என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை நீதிமன்ற பதில் நீதிபதி இலவத்தம்பி சஹாப்தீன் விசாரணைகளை மேற்கொண்ட பின், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் புகையிரதம் மோதி ஒருவர் பலி!!



மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் ரயிலுடன்மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் (04) இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மூன்றாம் குறுக்கு, திராய்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையானசேனாதிபதி அசோக் குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று இரவு 8.45 மணிக்கு சென்ற ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சடலத்தை நேரில் சென்றுபார்வையிட்ட திடீர் மரண விசாரனை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிசாரிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் போதிகள் வழங்கி வைப்பு







**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

திருகோணமலைசுகுச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கொவிட் காரணமாக தினக்கூலி தொழில் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலையில் இயங்கி வரும் லீட்ஸ் நிறுவனம் ஊடாக சீபிஎல் கிரேன்ட்2 நிறுவன நிதி அனுசரனையில் ஞாயிற்றுக்கிழமை (05) வழங்கி வைக்கப்பட்டன. தலா 3499.50 ரூபா பெறுமதியான 300 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. நிலாவெளி,கோபாலபுரம்,கும்புறுப் பிட்டி வடக்கு,கும்புறுப் பிட்டி தெற்கு,புல்மோட்டை போன்ற கிராமங்களுக்கு பொருளாதார ரீதியாக கஷ்டப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்காக குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணம் தழுவியதாக மாபெரும் இரத்ததான நிகழ்வு





**(எஸ்.அஷ்ரப்கான்)**

தற்பொழுது நிலவி வரும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்குமுகமாக ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நேற்று (05) அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கியதாக சுமார் 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த இரத்ததான நிகழ்வு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனின் செயலாளர் மிப்றாஸ் மன்சூரின் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.றஹ்மான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இங்கு இரத்ததானம் செய்பவர்களை கௌரவிக்கும் வகையில் ஏ.ஆர். மன்சூர் பவுண்டேஷனின் ஞாபகார்த்த மக் (mug) இங்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு ஊடக அனுசரனையினை தினக்குரல்,கெபிடல் ரீ.வி. கெபிடல் எப்.எம்., நியூஸ் ஹவர்ஸ், அறம் முகநூல் தொலைக்காட்சிகள் ஆகியவை வழங்கியிருந்தன.

இங்கு கருத்து தெரிவித்த வைத்திய அத்தியட்சகர் ஏ.எல். எப்.றஹ்மான், இவ்வாறு சமூகத்திற்கு தேவையான முக்கிய பணிகளில் ஏ.ஆர்.மன்சூர் பெண்டேசன் முன்னின்று செயற்பட்டு வருவது பாராட்டத்தக்க விடயம் என்றும் இதுபோன்ற அமைப்புக்கள் முன்னின்று இந்த இரத்ததானம் வழங்குவதற்கும் எமது மக்களின் இரத்தத் தேவையினை நிவர்த்தி செய்து உயிர்காக்க உதவுமாறும் வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க நடைபவணி





**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருதல் 16 நாள் செயற்பாட்டின் ஒரு பகுதியாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் நடைபவணியொன்று இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் சனிக்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவணியானது குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தை சென்றடைந்தது. பெண்களை பாதுகாப்போம், உலக வேலைத் தளங்களில் பாலியல் வன்முறைகளை முடிவுறுத்தல், பெண்களுக்கான சமத்துவத்தை பெற்றுக் கொடுப்போம், பெண்கள் மீதான வன்முறைகளுக்கான தீர்வுகள் உடனடியாக வழங்கப்படவேண்டும், பெண்கள் மீதான வன்முறைகள் சிறப்பு நீதிமன்றங்கள் ஊடாக விசாரனை செய்யப்பட வேண்டும் உட்பட பல வாசகங்களை உள்ளடக்கிய வகைதில் பதாகைகளை ஏந்தியவாறு நடை பவணியாக தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதி ஊடாக சென்றனர்.

உலகளாவிய ரீதியில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதனையும் அவர்களை பாதுகாப்பதனை உறுதி செய்யும் வகையிலும் உலக மக்களை வலுவூட்டும் செயற் திட்டமாக ஆண்டு தோரும் கார்த்திகை மாதம் 25 ம் திகதியிலிருந்து மார்கழி 10 வரை 16 நாட்கள் பெண்களின் ஆதரவுக்கான அணிதிரட்டும் காலமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தகைய காலப் பகுதியில் பெண்களின் நலன்கள் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் உரிமை மீறல்களை உலகரியச் செய்யும் நோக்கில் இத் தினங்கள் காணப்படுகிறது.

இத்தினத்தினை நினைவு கூறும் முகமாக இவ்வாறான விழிப்புணர்வு நடை பவணி இடம் பெற்று வருகின்றது பெண்களின் உரிமைகள் சிறுவர்களை மேம்படுத்தும் நோக்குடன் இந்த செயற்பாடு அமையப் பெற்றுள்ளது .மூதூர், வெருகல்,குச்சவெளி உள்ளிட்ட இடங்களிலும் இவ்வாறான திட்டம் முன்னர் நடை முறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் இதன் போது குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றதுடன் கலை நிகழ்வுகளும் மேடைகளை அலங்கரித்தன.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி,திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார்,செயலாளர் ஊர்மிலா மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி,பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் நஸ்ரின் டிலானி,சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரியால் உட்பட மகளிர் அணியினர் என பலர் கலந்து கொண்டார்கள்.

# மருதமுனையில் அம்பாறை மாவட்ட வலுவிழப்புடனான நபர்களுக்கான சர்வதேச தின விழா





**(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம். ஷினாஸ், றாஸிக் நபாயிஸ்)**

'உலக கோவிட் 19க்கு பின்னரான காலப் பகுதியில் உட்படுத்தல், அணுகுவசதி, நிலைபெறு ஆகியவற்றை முன்னோக்கிய வலுவிழப்புடனான நபர்களின் தலைமைத்துவமும் பங்குபற்றலும்' எனும் தொனிப் பொருளில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட அலுவலகம் மருதமுனை ஹியூமன் லிங்க் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய வலுவிழப்புடனான நபர்களுக்கான சர்வதேச தின விழா நிகழ்வு அம்பாறை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எம்.பி. சம்சுதீனின் தலைமையில் மருதமுனை கலாச்சர மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார் கலந்து கொண்டார். கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாகாண பணிப்பாளர் என். வதிவண்ணன் கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள தலைமை சிரேஷ்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.எம்.எம். அலியார், மருதமுனை ஹியூமன் லிங்க் அமைப்பின் பணிப்பாளர் ஏ. கமறுதீன், ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம். மீராமுகைதீன், ஓய்வுபெற்ற மாவட்ட காணிப்பதிவாளர் ஜே. எம். ஜமால் முகம்மட் உட்பட பிரமுகர்கள், விசேட தேவையுடைய மாணவர்களின் குடும்பத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகளும், விசேட திறமைகளும் இந்நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்தும் விதமாக பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்



**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

நாட்டில் சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவத்தை வைத்து எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் அடைய நினைப்பதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்க்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 8 ஆவது சம்மேளனக் கூட்டம்

**(பொலிவேரியன் நிருபர் எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 8 ஆவது சம்மேளனக் கூட்டம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (04) சனிக்கிழமை நடைபெற்றது.



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச். அனுர ஜெயந்த மற்றும் சுனில் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நீர்வழங்கல் அதிகாரசபையின் பிரதித் தவிசாளருமான நிமல் ஆர். ரணவக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக, நீர் வழங்கல் அமைச்சின் இணைப்புச் செயலாளரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கிழக்குமாகாணஅரசியற்பொறுப்பாளருமானஎம்.எப்.ஏ.மரைக்கார், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்பாளரான றைஷா மகறூப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், இணைப்பாளர்கள், அமைப்பாளர்கள், தொண்டர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
wellness massage
www.aaranayurveda.ch
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT
Maestro

# போன்சேகாவையும், பிறேமதாசவையும் ஆதரித்தது தவறு என்பதை இப்போது உணர்கிறேன்!

## மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

**(இ.சுதாகரன்)**

கடந்த 2010 ஜனவரி 27,ல் ஜனாதிபதித்தேர்தலில் சரத் பொன்சேகாவையும் 2019, ஜனாதிபதித் தேர்தலில் சஜீத் பிறேமதாசவையும் ஆதரித்தது கூட்டமைப்பினராகிய நாம் விட்ட தவறாகவே இப்போது உணர்கிறேன் என மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு' சட்ட விவாதத்தில் சரத் பொன்சேகா பாராளுமன்றில் உரையாற்றும்போது, போரில் உயிர் நீத்தவர்களை நினைவு கூருவதற்கு தடை விதிக்க வேண்டும் என ஆற்றிய உரை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்டபோது, அதற்கு பதில் வழங்கியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தற்போது 2021,ல் பாராளுமன்றில் உயிர் நீத்தவர்களை தமிழ் மக்கள் நினைவுகூர தடை விதிக்க வேண்டும். தான் எதிர்வரும் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக தலைவர் சஜீத் பிறேமதாசவின் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக வருவேன். அவ்வாறு வந்தால் எனது முதல் வேலை உயிர் நீத்தவர்களை நினைவு கூருவதை தடைசெய்வேன். இதுதான் சஜீத் பிறேமதாசாவை தலைமையாக கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என ஆணித்தரமாக கூறியிருந்தார்.

இதே பொன்சேகா கடந்த 2010, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக மகிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்டபோது அவருக்கு முழு ஆதரவு வழங்கியவர்கள் கூட்டமைப்பினரே. இராணுவத்தளபதியாக செயற்பட்டு முள்ளிவாய்க்காலில் இறுதி போரை நடத்தி எமது இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் உயிர்நீத்த வரலாறுகளையும் மறந்து பொன்சேகாவை ஆதரித்தோம். அவர் அந்த தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும்



அவருக்கு வடக்கு கிழக்கில் இருந்து அதிகப்படியான வாக்குகளை தமிழ் மக்கள் அளித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 44154 வாக்குகளும் வன்னியில் 28740 வாக்குகளும் மட்டக்களப்பில் 55663 வாக்குகளும் அம்பாறையில் 146912 வாக்குகளும் திருகோணமலையில் 69752 வாக்குகளும் பொன்சேகாவுக்கு கிடைத்தன. அதாவது இலங்கையில் 16, மாவட்டங்களில் மகிந்த ராஜபக்ச கூடிய வாக்குகளை பெற்று முன்னணியில் நின்றபோதும் வடகிழக்கிலுள்ள 5, மாவட்டங்களிலும் அதிகூடிய வாக்குகளை பொன்சேகா பெற்றார். அவரின் சொந்த மாவட்ட மக்களே பொன்சேகாவை நிராகரித்தபோது வடகிழக்கு மக்கள் அவரை ஆதரித்தனர்.

இந்த நன்றியை மறந்து 11, வருடங்கள் கடந்து இப்போது வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் உறவுகள் போரில் உயிர் நீத்தவர்களை தாம், பாதுகாப்பு அமைச்சராக வந்து தடை செய்வதாக கூறுகிறார். அது போல் தமது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினதும் அதன் தலைவர் சஜீத் பிறமதாசவினதும் நிலைப்பாடு இதுவே என தெளிவுபடுத்தினார். இதுதான் சிங்கள இனவாத முகம் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும்.

அதே சஜீத் பிறமதாசவை கூட்டமைப்பினராகிய நாம் கடந்த 2019 நவம்பர் 17ல், ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்தமையும் தவறு. அந்த தேர்தலில் தென்பகுதியில் 16, மாவட்டங்களிலும் சஜீத் பிறமதாசவை நிராகரித்த மக்கள் வடக்கு கிழக்கில் ஐந்து மாவட்டங்களிலும் அவருக்கு அதிகூடிய வாக்களித்தனர். இதுவும் கூட்டமைப்பினராகிய எமது ஆதரவால்தான் என்பது வெளிப்படை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜீத் பிறேமதாசவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 23261 வாக்குகளும் வன்னியில் 26105 வாக்குகளும் மட்டக்களப்பில் 38460 வாக்குகளும் அம்பாறையில் 135058 வாக்குகளும் திருகோணமலையில் 54135 வாக்குகளையும் அளித்து இலங்கையில் அதிகூடிய வாக்குகளை சஜீத் பிறேமதாச பெற வைத்தனர்.

சரத் பொன்சேகா உயிர் நீத்தவர்களை நினைவுகூர முடியாது என பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது நன்றி மறந்த எதிர்கட்சித் தலைவர் சஜீத், சரத் பொன்சேகாவின் உரைக்கு எதிராக எந்த கருத்துக்களையும் கூறாமல் மௌனம் காத்தார். இதில் இருந்து பொன்சேகாவின் கருத்தை அவர் ஏற்பதாகவே இருந்தது.

இந்த பேச்சையும் நடவடிக்கையையும் அவதானித்தால் தமிழன் தமிழன்தான் சிங்களவன் சிங்களவந்தான் என்ற எண்ணமே தோன்றுகிறது. பொன்சேகாவின் உரை மூலம் சிங்கள இனவாதிகளின் உண்மை முகம் வெளிக்கொணரப்பட்டது. யார் யாரை கடந்த 2010, 2019 தேர்தல்களில் கூட்டமைப்பினராகிய நாம் ஆதரித்தோமோ அவர்களாலேயே எமது முகத்தில் கரிபூசப்பட்டோம் என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை.

எனவே, நான் உட்பட கூட்டமைப்பு கடந்த 2010, ல் பொன்சேகாவையும் 2019 ல் பிறேமதாசவையும் ஆதரித்தமை தவறு என்பதே எனது நிலைப்பாடு, இது காலம் கடந்து உணர்த்தியுள்ளது.

சரத் பொன்சேகா, சஜீத் பிறேமதாஸ ஆகிய இருவரையும் ஆதரித்தமைக்கு கிடைத்த பரிசு எமது உறவுகளை நினைவுகூர விடாமல் நாம் ஆதரித்த சிங்கள தலைவர்களே எதிர்க்கிறார்கள் என்பதே உண்மை எனவும் மேலும் கூறினார்.

# ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு: 32 துறை சார்ந்தவர்களுக்கு கௌரவமளிப்பு!









**(நூருல் ஹுதா உமர், ஸியாத் எம் இஸ்மாயில்)**

அக்கரைப்பற்று ஆர்.கே.எஸ். வலையமைப்பு இரண்டாவது தடவையாக நடத்திய ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு இம்முறை கொரோனா காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களை கௌரவிக்கும் விதமாக அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் பாடசாலை அதிபரும், அக்கரைப்பற்று ஆர்.கே.எஸ். வலையமைப்பின் பணிப்பாளர்களில் ஒருவருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

அதில் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆளுமைக்கான விருதினை அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ், 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர் விருதினை சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமர், பூர்விக சமூகத்தின் நம்பிக்கை விருதினை விக்டர் ஜெகன், சிறந்த கல்விச்சேவைக்கான விருதினை ஏ.எம். எம். தாஜுதீன், சிறந்த சமூகவியலாளர் விருதினை எம்.எஸ். மர்சூக், சிறுவர் மேம்பாட்டுக்கான விருதினை எம்.எச். எம். உவைஸ், சமூக சேவைக்கான விருதினை ஏ.பி. பதுருதின், வளர்ந்துவரும் அரசியல் தலைமைத்துவ விருதினை எம்.எஸ்.அமீன், இளம் தலைமைத்துவ சமூக விருதினை எம்.ஐ. அரசாத், சிறந்த இளம் தொழிலதிபர் விருதினை அனீஸ் மால், இளம் தொழிலதிபர் விருதினை வை.எம். ஹக்கீம், மக்கள் அபிமான விருதினை ஆதம் அமீர் ஆகியோரும் சிறந்த மனிதாபிமான சட்டத்தரணிக்கான விருதினை சட்டத்தரணி கே.எல். சமீம், சிறந்த ஆயுர்வேத வைத்தியசாலை நிர்வாகத்திற் கான விருதினை டாக்டர் எம்.ஏ. நபில், சிறந்த ஆயுர்வேத வைத்தியர் விருதினை டாக்டர் ஏ.சி. டில்ஷாத், மருந்தாளருக்கான விருதினை ஏ.ஆர்.எம். ரஹ்மான், நல்லிணக்கத்துக்கான விருதினை எஸ்.எம். லாபிர், சமூக தலைவருக்கான விருதினை எம்.எஸ். ஜுனைதீன், பிராந்திய சுகாதார சேவைகளுக்கான விருதினை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன், சிறந்த எழுத்தாளருக்கான விருதினை கலாபூஷணம் என்.எல். நூர்தீன், விளையாட்டுத்துறை விருதினை ஏ.எல். நாஸர், சிறந்த மனிதாபிமான விருதினை ஏ.எம். பைரூஸ், பெண்கள் மேம்பாட்டுக்கான விருதினை ஜமீலா ஹமீட், ஆளுமைப் பெண்ணுக்கான விருதினை உதவிப்பிரதேச செயலாளர் எப். நஹீஜா முஸாபிர், சமூக சேவைக்கான விருதினை ஏ.எல். எம். இஸ்மாயில் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். றமீஸின் நெறிப்படுத்தலில் ஆர்.கே.எஸ். வலையமைப்பின் தவிசாளர் எம்.எம். றுக்சானின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினர்களுமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ், பைசால் காசிம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர். மேலும் கிழக்கு மாகாண சபை பேரவை தலைவர் கலாநிதி எம்.கோபாலரத்னம், அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா, அட்டாளைச்சேனை பிரதேச சபை உப தவிசாளர் அதிபர் எஸ்.எம்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான எஸ்.எம். சபீஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்ஸில், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன் உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.




# திருமலை மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிப்பு





**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வீடற்ற தகரக் கொட்டில்களில் மிக நீண்ட காலம் வாழும் இரு குடும்பங்களுக்கு வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் நிரந்தர வீடு நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கு கையளிக்கப்பட்டது.

சனிக்கிழமை திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ.எம். பாரிஸ் மற்றும் குறித்த பிரதேச செயலக உத்தியோகதர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

வறுமை காரணமாக ஓலைக் குடிசைகளால் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் நிரந்தர வீடுகளை நிர்மாணிக்க முடியாத பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வன்னி ஹோப் அவுஸ்ரேலியா தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வாழ்வதற்கான இல்லறம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த விசேட செயற்றிட்டத்தின் கீழ் மேற்படி இரு வீடுகளும் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி கிராமத்திலும் தம்பலகமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள கல்மெட்டியாவெ கிராமத்தில் உள்ள மற்றொரு கூடம்பத்துக்குமே மேற்படி வீடுகள் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளில் உள்ள தனிப்பட்ட நலன் விரும்பிகளின் அன்பளிப்புகள் மற்றும் தர்ம பணங்கள் மூலம் இது போன்ற மனிதாபிமான சேவைகளை வன்னி ஹோப் நிறுவனம் நடைமுறைப் படுத்தி கொடுங்கள். அந்த அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் உள்ள பிரபல சமூக ஆர்வலர் விந்திரன் ரஜினி நாகராஜா மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் சிவகுமார் குடும்பத்தார் ஆகியோருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வன்னி ஹோப் நிறுவனமும் மக்கள் சேவை மன்றமும் திருகோணமலை மாவட்டத்தில் இன, மத, பிரதேச வேறுபாடுகளின் பல்வேறு மனிதாபிமான மற்றும் சமூக சேவைகள் சார் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலிபன் கோப்பி அறிமுகம்




## பிராந்திய மட்டத்தில் அறிமுக விழா



இலங்கையின் முன்னணி நிறுவனமான மலிபன் பால் மா நிறுவனத்தின் புதிய உற்பத்தியான மலிபன் கோப்பி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த (01) புதன்கிழமை திருகோணமலை வில்லா சுற்றுலா விடுதியில் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான வணிக மேம்பாட்டு முகாமையாளர் ஜே.பிரதீபன் அவர்களின் தலைமையில் சமய அனுஸ்டானங்களுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மெலிபன் பால் மா நிறுவனத்தின் புதிய உற்பத்தியான மெலிபன் கோபி அறிமுகம் செய்யப்பட்டதுடன் நாட்டின் 60 வருடத்திற்கு மேலான மக்களின் நன்மதிப்பை வென்ற மெலிபன் குடும்பத்தின் தலைசிறந்த ஒரு உற்பத்தி பொருளை பாவனையாளர்களுக்கு வழங்கும் நோக்கில் நாட்டின் கோப்பி உற்பத்தியில் பெயர் பெற்ற நுவரேலியா,பதுளை மற்றும் வெளிமட பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் தெரிவுசெய்யப்பட்ட கோப்பிகளினால் தயாரிக்கப்பட்ட மெலிபன் கோப்பி பவுடர்களை மக்கள் கொள்வதற்காக இன்றைய தினம் அறிமுகம் செய்வதாக தெரிவிக்கப்பட்டது

மேலும் இவ் கோப்பி பவுடர் சர்வதேசதரத்தில் இலங்கை வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட உள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. நாட்டில் எந்த ஒரு சில்லறை கடைகளிலும் இன்றையதினம் அறிமுகம் செய்யப்படும் மெலிபன் கோப்பியினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் மெலிபன் பால் மா நிறுவனத்தின் உயர் அதிகாரிகளான தலைமை விற்பனை அதிகாரி அமல் பெருசிங்க,விற்பனை தலைமை அதிகாரி

அனுருத்த மல்லிகாராச்சி சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஆகியோர்களினால் ஸூம் தொல்நுட்பத்தினுடாக வடக்கு கிழக்கு விற்பனை பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டதுடன்

இவ் அறிமுக விழாவில் மலிபன் பால்மா நிறுவனத்தின் வடக்கு கிழக்கு மாகாண வணிக மேம்பாட்டு முகாமையாளர் ஜே.பிரதீபன்,கிழக்கு மாகாண பகுதி விற்பனை நிர்வாகி எம்.ஆர்.எம்.பாயிஸ் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண அனைத்து விற்பனை பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை
ரவ்பீக் பாயிஸ்












## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 07

# மூத்த இலக்கியத்துறைக் கலைஞர் கலாபூஷணம் சரோஜினிதேவி சிவஞானம் கலைஞரின் சாதனைப் பயணம்

**மானிடத்தின் சமூக, பண்பாட்டு, வரலாற்று விழுமியங்களின் பொக்கிஷமே இலக்கியம் ஆகும். இவை வாழ்வின் முறை நிலைக்களங்களை, தனிமனித சமூக ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை நம் மனக்கண் முன்னே நிலை நிறுத்தும் ஆற்றல் மிக்கவை. படைப்பாளியானவன் தனது படைப்பின் மூலமாக சமூகம் பற்றிய தன் எண்ணக்கருவை உணர்ச்சி வயமாகவும், ஏற்ற பாத்திரப் படைப்பினூடாகவும் இலக்கியச் சுவையினை தன்னுடன் இழுத்துச் செல்வதற்கு முயற்சி செய்கின்றான். அவ் வகையில் தமிழ் சார் இலக்கியங்களும், சமயம் சார் இலக்கியங்களும் தற்காலத்தின் தேவையினை உள்வாங்கி காலக் கண்ணாடியாக புதுமைப் பொலிவு பெறுவதுடன் நயம் பல நிறையும் வாய்ப்பினையும் கொண்டு உருப்பெற்று படைக்கப்பட்டு வருகின்றன.**
**அவ் வகையில,; திருக்கோணமலையின் உவர்மலைப் பிரதேசத்தினை வசிப்பிடமாகக் கொண்டவரும், தமிழ் மற்றும் சமயத் துறைகளின் அளவில்லாத பற்றுக் கொண்ட இலக்கிய ஆர்வலரும், 2014இல் இலக்கியத் துறையில் கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்டவருமான சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர் திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் அவர்களின் சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்ற கூற்றிற்கேற்ப தமிழ் மொழிக்கு உலகம் முழுவதும் மரியாதை உள்ளது. அவ் வகையில், இவருக்கு இலக்கிய நயத்தின் மீதான ஆர்வம் அவரது தந்தையின் பரம்பரையினூடாகவே உள்ளீர்த்தது. அதிலும் இவரது சிறு வயதிலிருந்தே இவரது தந்தையாரின் தாயார் அமரர். வீரமுத்து சிவக்கொழுந்து இவரை இலக்கியத்தின் பால் ஈடுபடச் செய்வதற்கு தூண்டுதலாக இருந்தார். இவரது தந்தை தெய்வேந்திரம் பிள்ளை அவருடைய காலத்தில், புராணபடலம் பாடுவதும், அதற்கு பொருள் சொல்வதையும், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றுவதையும் அவருக்கு அருகில் இருந்தபடி நுணுக்கமாக அவதானிப்பார். அவ் அவதானிப்பின் பிரகாரமே இவரது %ஆவது வயதிலே பண்ணிசையோடு இலக்கியப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். இவரது பாடசாலைக் கல்வியினை யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பாடசாலையில் பயின்றார். 6ம் தரத்திலிருந்தே வண்டமிழை செந்தமிழாக தேன் சொட்டச் சொட்டவும், இலக்கியத்தின் தொன்மைகளையும், மனித விழுமியங்களையும், அறக் கருத்துக்களையும் மென் சொல்லால் மிகைபட எடுத்துரைத்தனர் இவரது ஆசான்கள். அதன் தொடர்ச்சியே இவர் இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றினை வாசித்து தமிழினை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தார். இவ்வாறாகவே இவருக்கு உள்ளீர்ந்த இலக்கிய ஆர்வம் ஏற்பட்ட ஆரம்பகாலப் பயணமாகும்.



இக் கலைஞர் தமிழ் மீதும், சமயத்தின் மீதும் கொண்ட அதீத தீவிர பக்தியினால் நம் மண்ணுக்கு நூல்களையும் படைத்துள்ளார். அதன் வகையில், திருகோணமலை பத்திரகாளித்தாய் மீது இவர் கொண்ட பக்திப் பரவசத்தால் அன்னைக்கு என் உள்ளக்கமலம் என்ற முதற் நூலினை வெளியிட்டுள்ளார். இந் நூலானது படிப்பவர் பக்திப் பிரசவத்திற் திழைத்து மனச் சஞ்சலங்களை மறந்து இறைவன் புகழையும், இறை அருட் தன்மையையும் பெற வேண்டும் என்ற நோக்கில் படைக்கப்பட்டதாகும். அடுத்ததாக கல்வி எனும் சோலைக்குள் கலைப்பூங்கொத்தாக மலர்ந்த மாணவச் செல்வங்கள் பண்பட வளர்வதற்கு கல்வி நிரம்பிய பொக்கிஷங்களாக, நீதியகங்களாக கல்வியே கண், கல்வியே ஒளி என வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் பிள்ளைக்குணம் என்ற நூலினை வெளியிட்டார். அடுத்ததாக தலயாத்திரைகள், தீர்த்தங்கள், தீர்த்த யாத்திரைகள் வரலாற்றுப் பெருமை மிக்க வெருகற்பதி சித்திரவேலானது அதி சிறப்புடையது. வேல்சுயமாக வெருகல் கங்கைக்கு அருகே எழுந்தருளப் பெற்றது. இந்த வேற்பதிக்கு யாத்திரை செல்வதற்கான அருள்பேறு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் உருவாக்கப்பட்ட வேல்நடை பஜனைக் குழுவினருடன் இவருக்கும் செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவ் தலயாத்திரையின் போது தரிசித்த அருள் மிகுந்த ஆலயங்கள், அருள் பிரவாகங்கள் போன்ற பல விடயங்கள் இவரின் இதயத்தை ஈர்த்திழுத்த அற்புதங்களாகவே இவருக்குத் தென்பட்டு இவருடன் கரை புரண்டோடிய பக்தி வெள்ளத்தை வண்ணம் வண்ணமாக எழுத்தில் வடிக்க வேண்டும் என்று எண்ணி வெருகலம்பதியும் அருகுமெம்விதியும் என்ற நூலினை வெளியிட்டார். இவை தவிர, கும்பாபிஷேக மலர் ஒன்றிற்கும் கட்டுரை எழுதியுள்ளார். மற்றும் பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் கன்னியா வெந்நீர் ஊற்று, இலக்கிய ரசணை, நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும், வைகாசி விசாகம் போன்ற தலைப்பில் கட்டுரை எழுதி அனுப்பி பிரசுரமுமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவருக்கு இலக்கியத்துறையில் பல பட்டங்களும், விருதுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் கல்வியினை மென் மேலும் கற்பதற்கு வயதென்பது தடையில்லை என்ற குறிக்கோளினை மனதில் நிலைநிறுத்திக் கொண்டு சைவத்திலும் தனது கல்விப் புலமையை மேலும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு விடாமுயற்சியுடன் உழைத்த சிறப்புக்குரியவரும், பெருமைக்குரியவரும் இக் கலைஞராவார். அதன் வகையில், 2010இல், அகில இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தினால் இளஞ்சைவப் புலவர் பட்டமும் அதே ஆண்டில் சைவ பரிபாலனசபை யாழ்ப்பாணம் நிகழ்த்திய தேர்வில் சைவசித்தாந்த பால பண்டிதர் என்ற பட்டமும் கிடைக்கப் பெற்றது. 2012இல், அகில



இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தினால் சைவப்புலவர் பட்டச் சான்றிதழும் அதே ஆண்டில் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனம் நடாத்திய சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்தினால் திருமுறை நெறிச் செல்வர் என்ற சான்றிதழும், இந்து சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இந்து தர்மாசிரியர் பரீட்சையைப் பூர்த்தி செய்து இந்து தர்மாசிரியர் சான்றிதழும் கிடைக்கப்பெற்றது. 2013இல், சைவ பரிபாலனசபை யாழ்ப்பாணம் நிகழ்த்திய தேர்வில் சைவசித்தாந்த பண்டிதர் பட்டம் கிடைக்கப்பெற்றதோடு 2014இல், கலாபூஷண அரச விருதும், 2015இல், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் சைவசித்தாந்த முதுகலை மாணி பட்டமும் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியத் துறையில் இவரது ஒவ்வொரு படைப்பிற்கும் பக்கபலமாகவும், உறுதுணையாகவும் இவரது கணவர் சிவஞானம் மற்றும் பிள்ளைகள், குடும்பத்திலுள்ள அனைவரும்; இருந்து வருகிறார்கள். இவர்களைத் தவிர இவரது ஒவ்வொரு நூலினையும் சரி, பிழை பார்த்து ஆலோசனை கூறுவதில் தீட்ஷா குரு திருக்கோணமலை பத்திரகாளி ஆலய பிரதம குரு இரவிச்சந்திர குருக்கள் ஐயாவும்;; குறிப்பிடத்தக்கவர் ஆவார். இன்றைய சமூகத்தில் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு மிகக் குறைவாகவே காணப்படுவதாக இக் கலைஞர் மனம் வருந்தி கூறினார். அவரின் கருத்து யாதெனில், சமயம் என்பது இறைவனை உள்நின்று உணர்த்துவது எனப் பொருள் கொள்ளப்படும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் ஆகும். தற்கால சமுதாயமானது நவ நாகரிகமிக்கதாக மாறியுள்ளது. இதனால் சைவத்தின் தொன்மையினையும், அதன் மூலம் நாம் அடையும் நன்மைகளையும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. கடவுளை வழிபாடு செய்வதற்கும், திருக்கோயில்களை தரிசிப்பதற்கும் நேரமில்லை என்று பெற்றோர்களும் இருக்க அவர்களின் பிள்ளைகளும் சமயத்தில் ஈடுபாடு மிகக் குறைந்தளவில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. பிரதி ஞாயிறு தோறும் மட்டும் தான் சைவ அறநெறி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆனால் பிரதான பாடங்களுக்கும், நடனம், சங்கீதம் போன்ற பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதற்கான நேரம் மட்டுமே தற்கால சமுதாயத்தில் போதியளவாகவுள்ளது அதற்குமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதனை நான் குறைவாக கூறவில்லை ஆயினும் நமது மதத்திற்கும் ஓரளவுக்காகவாவது முக்கியத்துவம் அளிக்க வேண்டிய கடமை எம்மவருக்குண்டு. நீறில்லா நெற்றி பாழ ") ; எனக் கூறுவர். அதாவது திருநீறு அணியாதவர் முகம் சுடுகாட்டுக்குச் சமமாகும் என்பது பொருள். ஆனால் இன்று திருநீறு அணிந்தவரின் நெற்றியே மிக அரிதாக உள்ளது. இது இவ்வாறிருக்க பஞ்ச புராணங்களை முறையாக பண்ணோடு பாடுவதற்கு கூட தெரியாமல் இருக்கின்றது. இவ்வாறாக மனிதச் சமுதாயத்தின் மாறுபட்ட நவீனமயமான சூழலினால் நம் சமயம் நம்மைவிட்டு நீங்கிக் கொண்டு செல்கிறது. இதற்கு பாடசாலை சமூகம், பெற்றோர், பெரியோர், சைவ ஆர்வலர்கள் எதிர்கால சமுதாயத்தினருக்கு சமயத்தின் பால் ஈடுபாட்டை அதிகரிக்கவும், சைவ விழாக்கள், அனுஷ்டானங்கள், சிந்தனைகள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த எத்தணிக்க வேண்டும் என்பது இவரது தாழ்மையான கருத்தாகும் எனக் கூறினார்.

இவ்வாறாக இலக்கியத்துறையினை ஆத்மார்த்தமாக நேசித்து, தமிழையும், சைவத்தின் பெருமையையும் தான் எழுதிப் படைத்த நூல்களாலும், தனது ஆழமான கருத்துமிக்க விழிப்புணர்வு வார்த்தைகளாலும் எம் திருக்கோணமலை மண்ணில் நிலைபெறச் செய்ததோடு மட்டுமல்லாமல் எல்லோர் உள்ளத்திலும் தமிழையும், சைவத்தையும் மேலும் ஓங்கச் செய்த புகழுக்குரிய எம் அம்மணி சிறிது காலமாக உடல்நிலை சற்று தளர்ந்து காணப்படுகின்றார். அவரின் உடல் நிலையை கருத்திற் கொண்டு நான் ஆரம்பகாலத்தில் அவரிடம் நேர்காணலின் போது பெற்றுக் கொண்ட உண்மையான தகவல்களையும், அவரின் குடும்பத்தாரிடம் பெற்றுக் கொண்ட தகவல்களையும் இணைத்தே இக்கலைஞரின் சாதனைப் பயணம் தொகுக்கப்பட்டது என்பதை அன்பு வாசகர்களாகிய உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இக் கலைஞர் எதிர்காலத்தில் பல படைப்புக்களை படைப்பதற்கான வேலைப்பாடுகளை மேற்கொண்டு இருந்தார். அவற்றில் சில படைப்புக்கள் முடிகின்ற தருவாயிலுள்ளன. எனினும் அப் படைப்புக்கள் பற்றிய விபரங்களை இவரிடம் கேட்டு அறிவதற்கான வாய்ப்புக்கள் அரிதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



திருக்கோணமலை மண்ணில் இலக்கியத்துறையில் அளப்பரிய சேவையாற்றிய பெருமைக்குரியவரும், தமிழையும், சைவத்தையும் மக்கள் மனதில் நிலைநிறுத்தி, கொண்டு செல்வதற்கு தன்னால் முடிந்தவரை அரும்பாடுபட்டு உழைத்த இக் கலைஞர் தேகசுகம் பெற்று குணமடைந்து நீண்ட ஆயுளுடன் மீண்டும் இலக்கியப் பணியில் ஈடுபட்டு, மிளிர்ந்த உற்சாகத்துடன் பல நூல்களைப் படைத்து மென்மேலும் இலக்கியப் பணிகளைச் செய்வதற்கு வாழ்த்துவதோடு, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**



**தொகுப்பு :-**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**

# கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஆயுள்வேதத்துறையை தனியார்துறையுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல்

(பைஷல் இஸ்மாயில் )

கிழக்கு மாகாணத்தில் ஆயுள்வேதத்துறையை தனியார்துறையுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் பி.வி.எச்.சிந்தக்க விஜயவரத்தன, ஆளுநர் செலயக செயலாளர் எல்.பி.மதநாயக்கா, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், தேசிய ஆயுள்வேத நிறைவேற்று தவிசாளர்





தெங்கமுவ நாலக தேரர், கிழக்கு மாகாண ஆயுள்வேத அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல திட்டங்களைப் பற்றிய பல விடயங்களை கிழக்கு மாகாண ஆணையாளர் வைத்திய கலாநதி (திருமதி) இ.ஸ்ரீதரினால் ஆளுநரின் கவனத்திற்கு இதன்போது கொண்டுவந்தார்.

ஆயுள்வேதத்துறையை அபிவிருத்தி செய்ய தனியார்துறையின் பங்களிப்புக்கள் மிகவும் இன்றியமையாதவையாக இருக்கின்றது. அதனால் அவர்களின் பங்களிப்புக்கள் எமக்குத் தேவையாகவும் இருக்கின்றது. எனவே, ஆயுள்வேதத்துறையை தனியார்துறையுடன் இணைந்து அவிருத்தி செய்தல் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் ஆயுள்வேத அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய பல தீர்மானங்களும் இன்றைய கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பதினால் எடுக்கப்பட்டது.

இதன்போது, கிழக்கு மாகாண ஆயுள்வேத அபிவிருத்திக்குழு உறுப்பினர்களின் பல கருத்துக்களும் முன்வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# இறக்கக்கண்டி கடலில் நீராடச் சென்ற இரு மாணவர்கள் பலி



திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற இரண்டு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிசார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை காலை 11 மணியளவில் இறக்கக்கண்டி கடற்கரையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் இறக்கக்கண்டி வாழைத்தோட்டம் பிரதேசத்தை சேர்ந்த இறக்கக்கண்டி அல் ஹம்ரா மகா வித்தியாலயத்தின் மாணவர்களான மௌலவி அப்துர் ரஹ்மானின் மகன் முகம்மது அர்ஹம் (15வயது) மற்றும் அதே பிரதேசத்தை சேர்ந்த உவைஸ் அவர்களின் மகன் முஹமட் சஹி (14 வயது) எனவும் தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்த உறவினர்களுடன் இவ் இரண்டு மாணர்களும் இறக்கக்கண்டி கடற்கரையில் நீராட சென்ற போது நீரில் மூழ்கியதாகவும் நீரில் மூழ்கிய சமயத்தில் கூச்சலிட்டு கத்திய போதும் கரையிலிருந்த ஒரு சிலரின் உதவியுடன் காப்பாற்ற முற்பட்ட போதிலும் பலனின்றி இருவரும் உயிரிழந்துள்ளதகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குச்சவெளி பொலிசார் தெரிவித்தனர்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு காரைதீவில் பூஸ்டர் கொரோனா தடுப்பூசி !







(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் வாழும், 60வயதுக்கு மேற்பட்ட ஆண்பெண் இருபாலாருக்கும் கொரோனா 3வது பூஸ்டர் தடுப்பூசியாக 'பைசர்' தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

முதலிரண்டு தடுப்பூசிகளை ஏற்றி 3மாதம் கடந்தவர்களுக்கே இப் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுவருகிறது.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலன குழுவினர் கடந்த 3தினங்களாக சுமார் 650பேருக்கு தடுப்பூசிகளை ஏற்றியுள்ளனர்.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி ஆகிய இடங்களிலும் இச்செயற்பாடு நடைபெற்றது.

'எனினும் முதலிரண்டு தடுப்பூசியைப் பெறுவதில மக்கள் காட்டிய ஆர்வம் இந்த 3வது பூஸ்டர் ஊசி ஏற்றுவதில் போதுமானளவு இல்லை. அதனால் நாம் ஒலிபெருக்கிமூலம் கிராமங்களில் விழிப்புணர்வு செய்யநேரிட்டது ' என காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

# மட்டு.- அம்பாரை மாவட்டங்களில் பல வருடங்களாக கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் கைது

(வி.சுகிர்தகுமார் )

அக்கரைப்பற்று பொலிசாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக மட்டு அம்பாரை மாவட்டங்களில் பல வருடங்களாக 23 இற்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுவந்த இரு நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் சுமார் 25 பவுண் தங்க நகைகளும் ஒரு ஆட்டோ உள்ளிட்ட மூன்று மோட்டார் சைக்கிளும் 3320 மில்லிகிறாம் ஹெறோயின் போதைப்பொருளும் கொள்ளையிட பயன்படுத்திய ஆடைகளும் மணிக்கூடு ஒன்றும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிசாரி தெரிவித்தனர்.

கடந்த பல வருடங்களாக அம்பாரை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மிகவும் சூட்சுமமான முறையில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த இறக்காமம் வாங்காமப்பிரதேசத்தை சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு.எம்.எஸ்.டி.விஜயதுங்கவின் நேரடி கண்காணிப்பில் பெருங்குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீத் தலைமையிலான பொலிசார் மேற்கொண்ட



அதிரடி நடவடிக்கை காரணமாகவே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

மிகவும் சாதுர்யமான முறையில் தனியாக செல்லும் பெண்களின் நகைகளை கொள்ளையிடுவதுடன் இதற்காக வெவ்வேறு மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறு கொள்ளையிடும் பொருட்களை விற்று அதில் இருந்து கிடைக்கும் பணத்தில் போதைப்பொருள்பாவனை மற்றும் சூதாட்டம் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர். ஆயினும் பொலிசாரின் கண்களில் சிக்காமல் மறைந்திருந்த நிலையில் பொலிசாரும் குற்றவாளிகளை வலை விரித்து தொடர்ந்தும் தேடி வந்தனர். இந்நிலையில் குறித்த நபர்கள் இருவரும் இறக்காமம் வாங்காமப்பிரதேசத்தில் மறைந்திருப்பதாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலிசார் இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரையும் அக்கரைப்பற்று நீதிமன்றில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் ஆஜர்படுத்தி % நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியையும் பெற்றிருந்தனர்.

இதனையடுத்து தடுத்து வைத்திருந்த இருவரையும் விசாரணை செய்த நிலையில் கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் உட்பட களவாடப்பட்ட இரு மோட்டார் சைக்கிளும் சுமார் 25 பவுண் நகையும் 3320 மில்லிகிறாம் ஹெறோயின் போதைப்பொருளும் ஆடைகளும் கைப்பற்றப்பட்டன.

குறித்த கொள்ளை சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு ஏறாவூர் காத்தான்குடி களுவாஞ்சிக்குடி மற்றும் அம்பாரை மாவட்டத்தின் அக்கரைப்பற்று திருக்கோவில் கல்முனை சம்மாந்துறை சவளக்கடை மத்திய முகாம் உகன போன்ற பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதேநேரம் குற்றங்களுடன் சம்மந்தப்பட்ட இருவரையும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிசார் இன்று நடவடிக்கை எடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று உள்ளிட்ட பல பிரதேசங்களில் தொடர் கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த இருவரையும் கைது செய்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பெருங்குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினரை பொதுமக்கள் பாராட்டுவதுடன் சற்று மனநிம்மதியும் அடைந்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

# 15 இலட்சம் பணம், ஒன்றரை பவுன் தங்க நகைகளுடன் ஒருவர் கைது



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உவர் மலை பகுதியில் கடந்த மாதம் 23.11.2021 அன்று ஒரு வீட்டில் 15 இலட்சம் ரூபா பணமும் ஒன்றரை பவுன் தங்க நகையும் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரனையினை மேற்கொண்டிருந்த நிலையில் களவு போன வீட்டில் சாரதியாக கடமையாற்றி வந்த ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது உரிய வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து உரிய சாரதி தலைமறைவாகியிருந்தார். இவரை மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் தேடுதல் நடாத்தி வந்த பொலிஸார் மட்டக்களப்பில் தனது இரண்டாவது மனைவியின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்தப்பட்ட நபர் திருகோணமலை பகுதியை சேர்ந்த வயது (34) குடும்பஸ்தர் எனவும் தெரியவருகிறது.

இவரிடமிருந்து ஒன்பதரை இலட்சம் ரூபா பணமும் ஒன்றரை பவுன் தங்க நகையும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நுவரெலியா கல்வி வலய பாடசாலைகளுக்கு உதவி வழங்கல்







(தலவாக்கலை பி.கேதீஸ்)

ரோட்டரக்ட் பீஸ் சிட்டி அட்டன் கழகத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை ரோட்டரி வத்தளை மற்றும் கொழும்பு மிட்சிட்டி கழகங்களின் அனுசரணையோடு நுவரெலியா கல்வி பணிமனையில் இடம்பெற்றது.

6 மில்லியன் பெறுமதியான கை சுத்திகரிப்பான்கள் மாவட்டத்தின் பின் தங்கிய சுமார் 150 கஸ்ட பிரதேச பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி வலயத்தின் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஹரிச்சந்திரன், உதவி கல்விப் பணிப்பாளர்களான சாந்தகுமார், செல்வராஜா, நெடுஞ்செழியன் மற்றும் கொழும்பு மிட் சிட்டி தலைவர் ரோட்டேரியன் இசானி ஜயசிங்க மற்றும் ரோட்டேரியன் சரவணன், முன்னாள் தலைவர் ராஜலிங்கம் மற்றும் ரோட்டரக்ட் பீஸ் சிட்டி அட்டன் தலைவர் தனுஷன் மற்றும் கழக அங்கத்தவர்கள் நுவரெலியா கல்வி வலய பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# முன்னோர் கையாண்ட வழிமுறைகளை கைவிட்டமையே இன்று நீரழி நோயாளர்கள் தொகை அதிகரித்து செல்லுகின்றது

## வைத்திய கலாநிதி ஆர்.மணிவர்ணன்

( வாஸ் கூஞ்ஞ)

இன்றைய சமூகம் பழமை உணவு வகைகளை கைவிட்டும் வீடுகளிலே எமது முன்னோர் கையாண்டு வந்த வீட்டு வேலைகளை கைவிட்டு உடலுக்கேற்ற பயிச்சிகளை பெறாமையால் இன்று பலர் நீரழிவு நோய்களுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ளுகின்றார்கள் என மருத்துவ அத்தியட்சகரும், மாவட்ட ஆயுள் வேத ஒருங்கிணைப்பாளருமான வைத்திய கலாநிதி ஆர்.மணிவர்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகும் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இணைந்து உலக நீரழிவுவாரத்தை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாமை சனிக்கிழமை (04.12.2021) மன்னாரில் பேசாலை மன்.சென் மேரிஸ் வித்தியாலயத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பால் 3 மணி வரை நடாத்தினர்

இவ் மருத்துவ முகாமுக்கு தலைமைதாங்கிய மருத்துவ அத்தியட்சகரும், மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளருமான வைத்திய கலாநிதி ஆர்.மணிவர்ணன் இங்கு இதை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில்;



மன்னார் மாவட்டத்தில் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகும் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இணைந்து நடாத்தும் முதல் முறையாக நடாத்தும் ஒரு நிகழ்வாக இது அமைகின்றது.

இவ் நிகழ்வானது உலக நீரழிவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது.

இன்று உலகத்திலே இந்த நீரழிவு நோயினால் பலர் பீடிக்கப்பட்டிருப்பது நாம் அறிந்த விடயமாகும்.

இந்த நோயிலிருந்து ஆயுள்வேத மருத்துவத்தின் மூலமும் எமது உணவின் மூலமும் நாம் எவ்வாறு விடுவிக்கப்படலாம் என்பதையும் நாம் அறிந்து எமது வாழ்க்கைக்கு மாற்றிக்கொள்ள வேண்டும்.

எமது பாரம்பரிய உணவு வகைகளையும் நிகழ்வுகளையும் நாம் கைவிட்ட நிலையே இதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

அதுமட்டுமல் தற்பொழுது உடல் உழைப்பு அதாவது உடற்பயிற்சிகள் இக்காலக்கட்த்தில் அற்று போய் விட்டது.

அதிகமானோர் நடை பயிற்சி எடுப்பதில் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர். ஆனால் ஒரு குறுகிய தூரத்துக்கு சென்று வருவதற்கும் மோட்டர் சைக்கிள் பாவிப்பவர்களாக இருக்கின்றார்களே தவிர துவிச்சக்கர வண்டி ஓடுவதையும் தவிர்த்து விட்டனர்.

இவ்வாறு இன்று வீடுகளில் உரல் உலக்கை இல்லாத வீடுகளாகவே காணப்படுகின்றது. எமது முன்னோர் வீடுகளில் உரல் உலக்கை கொண்டு அரிசி போன்ற பொருட்களை இடித்து தங்களை அறியாமேல தங்கள் உடலை சீராக வைத்திருந்தனர்

ஆனால் இப்பொழுது இது மாற்றம் அடைந்து உடன் உணவு வகைகளில் மோகம் கொண்டு நாம் உடலை நோயுடன் வைத்திருப்பதையே காண்கின்றோம்.

அன்று எமது நாளாந்த உணவு பழக்கங்கள்கூட சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக காணப்பட்டது. இப்பொழுது நோய்களை அதிகரிக்கும் உணவு வகைகளையே இன்றைய சந்ததினர் கையாண்டு வருகின்றனர்.

நாம் இன்று பழமையை நோக்கி செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம் கையால் அரிசி இடித்து கிடுகு பின்னி இவ்வாறு நமது உடலுக்கேற்ற பயிற்சிகள் கொண்ட வேலைகளை செய்வோமாகில் நாம் எமது முன்னோர் போன்று உடல் உள நலத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ இது வழி சமைக்கும் என்றார்.

# திருகோணமலையில் சமய சகவாழ்வை கட்டியெழுப்புதல்





(அ . அச்சுதன்)

சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புதல் என்ற கருப்பொருளின் அடிப்படையில் தேசிய சமாதானப் பேரவையினால் Serving Humanity Foundation ஒருங்கிணைப்புடன் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சர்வமத தலைவர்கள், கிராம சேவகர்கள், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக பிரதேச சர்வமத குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் திறன் விருத்தியை அதிகரிக்கும் நோக்கில் டிசம்பர் மாதம் 04ம் திகதி பன்மைத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை காலை 9.00 முதல் மாலை 3.00 நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க். ஆஷிக் அலாப்தீன்(நளீமி) அவர்களின் தலைமையில் திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வளவாளராக திரு. நிஸாந்த குமார (Freelance Trainer) அவர்களும், தேசிய சமாதானப் பேரவையின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி குறித்த நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 43 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு சபை உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

# காலநிலை மாற்றத்தால் அம்பாறையில் கறுப்பு வர்ண வெளிநாட்டு பறவைகள் சஞ்சரிப்பு





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக வெளிநாட்டு பறவை இனங்கள் சஞ்சரிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

பொத்துவில் ,அக்கரைப்பற்று ,அட்டாளைச்சேனை, சம்மாந்துறை ,நாவிதன்வெளி, மத்தியமுகாம், சவளக்கடை ,நற்பிட்டிமுனை, ஆகிய பிரதேசங்களில் உள்ள நீர் நிலைகளை நாடி புதிய கறுப்பு நிறத்தினை உடைய வெளிநாட்டு பறவை இனங்கள் வருகை தருகின்றன.

குறித்த பறவையினங்களை இரசிப்பதற்காக அப்பகுதிகளுக்கு பலரும் வருவதோடு அங்கு புகைப்படம் எடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இம் மாதக் கடைசியில் அம்பாறை மாவட்டத்தில் பல நாட்டுப் பறவைகளும் இங்கு வந்து தங்குகின்றன. இங்கு டிசம்பர் மாதம் வரும் வெளிநாட்டு பறவைகள் ஜனவரி ,பெப்ரவரி ,மாதம் கூடு கட்ட துவங்கும். மேற்குறித்த பறவைகள் 2000 மைல் தூரம் பறந்து செல்லும் வல்லமை படைத்தவை. ஆஸ்திரேலியா , சுவிட்சர்லாந்து, ரஷியா, ஜெர்மனி, பிலிப்பைன்ஸ், நைஜரியா, சைபிரியா ஆகிய நாடுகளிலிருந்து பறவைகள் இங்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் செங்கால் நாரை, பூநாரை, கூழைக்கடா, கடல்காகம், கடல் ஆலா, கூழைக்கடா, பாம்புத்தாரா, சாம்பல்நாரை, வெட்டிவாயன், கரன்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், நாரை இனங்கள் அன்னப்பறவை உள்ளிட்ட கொக்கு இனங்கள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிக்கு விதவிதமான பறவைகள், இங்கேயே கூடுகட்டி தங்கி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்து, குஞ்சுகளுக்கு பறக்க கற்றுக்கொடுத்து, மார்ச் மாத இறுதியில் புதிய குடும்பமாய் சொந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதும் வழமையாகிவிட்டது.

மேலும் இப்பறவைகள் யாவும் இயற்கை சூழலை பாதுகாப்பதிலும் வேளாண்மை செய்கைக்கு விவசாயிகளுக்கு உதவுவனவாகவும் செயற்படுகின்றன.

# அரச தொலைக்காட்சி விருது பெற்றார் ஷியாமா யாக்கூப்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தயாரிப்பாளரான ஷியாமா யாக்கூப் அரச தொலைக்காட்சி விருது வழங்கி கௌரவிப்பட்டுள்ளார்.


தேசிய தொலைக்காட்சியான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தயாரிப்பாளரான ஷியாமா யாக்கூப் தயாரித்து நெறிப்படுத்தி ஐ அலை வரிசையில் ஒளிபரப்பான Tears of Ocean (கடல் விடும் கண்ணீர்) என்ற தொலைக்காட்சி ஆங்கில விவரண நிகழ்ச்சி 2020 ஆம் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சியாக தெரிவு செய்யப்பட்டு, அதன் தயாரிப்பாளரும் நெறியாளருமான ஷியாமா யாக்கூபிற்கு இலங்கை அரசின் உயர் விருதான 'அரச தொலைக்காட்சி விருது'வழங்கப்பட்டுள்ளது. கடந்த 29 ஆம் திகதி மாலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த 37 வருடங்களாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சிரேஷ்ட தயாரிப்பாராக பணியாற்றி வரும் ஷியாமா யாக்கூப், கல்வி நிகழ்ச்சிகள், மகளிர் நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், விவரண நிகழ்ச்சிகள், விஷேட நேரடி ஒளிபரப்புகள் போன்றவற்றை மூன்று மொழிகளிலும் நெறிப்படுத்தி வருகின்றார். இதுவரை ஆயிரத்திற்கும் அதிகமான நிகழ்ச்சிகளை தயாரித்துள்ள இவர், ஜப்பானிய NHK ஒளிபரப்பு நிலையத்தில் நான்கு மாத காலம் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பும் நவீன தொழில் நுட்பமும் என்ற விசேட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாத்தளை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷியாமா யாக்கூப், இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் 37 வருடங்கள் தொடர்ச்சியாக அத்துறையில் சிரேஷ்ட தயாரிப்பாளராக பணியாற்றி வரும் ஒரேயொரு தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கணவரான யூ. எல். யாக்கூப் அதே தேசிய தொலைக்காட்சி நிலையத்தில் சிரேஷ்ட உயர் நிலை பதவியில் கடமையாற்றி வருவதும் சிறப்பம்சமாகும்.

### ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி
# பயனாளிகளுக்கு வாழ்வாதார உள்ளீடு வழங்கி வைப்பு



200000 சமுர்த்தி குடும்பங்களை மேம்படுத்துவதற்காக சமுர்த்தி திணைக்களம் நாடு பூராவும் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது 200000 குடும்பங்களை மேம்படுத்தலுக்கான வேலைத்திட்டத்தில் சமுர்த்தி பயனாளி தன் தொழிலை விருத்தி செய்வதற்காக பல்வேறு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றது. எனவே இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான தொழில்சார் உள்ளீடுகளை 03.12.2021 அன்று ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் வைத்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட் அவர்களால் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ந.தவராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 30 சமுர்த்தி பயனாளிகளுக்கான உள்ளீடுகளை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட் அவர்கள் வழங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலக கணக்காளர் திரு.சஜ்ஜாத் அவர்களும், உதவி திட்டமிடல் பணிப்பாளர் அவர்களும், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு.அஸீஸ் அவர்களும், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# கல்முனை ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயத்திற்கு ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் பொதுக்கிணறு



(ஏ.பி.எம்.அஸ்ஹர் )

கல்முனை ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயத்திற்கு கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் பொதுக்கிணறொன்று நிர்மாணித்துக்கொடுக்கப்பட்டுள்ளது.கல்முனை பெரியநீலாவணைப் பிரதேசத்தில் ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயத்திற்கு மிக நீண்ட காலமாக பக்தர்கள் அடிக்கடி சமய ஆராதனைகளுக்கு ஒன்று சேர வரும்போது அவர்களுக்கான தேவையாகக் காணப்பட்ட மிக நீண்டகால குடிநீர் பிரச்சினையை கல்முனை மாநகர சபை உறுப்பினர் அனஸ்ரி ராகல் செலஸ்தினா ஊடாக ஆலய நிர்வாகத்தினர் கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பிடம் நிவர்த்தி செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர் .

ஆலயத்தின் வேண்டுகோளுக்கிணங்க அக்கோரிக்கையினை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகரசபை பிரதிமுதல்வருமான ரஹ்மத் மன்சூர் ஏற்றுக்கொண்டு பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் இப் பொதுக்கிணற்றினை வை.எம்.எம்.ஏ.நிறுவனத்தின் அனுசரணையுடன் நிர்மாணித்து உத்தியோகபூர்வமாக நேற்று கையளித்தார்.

நேற்றைய நிகழ்வில் ரஹ்மத் பவுண்டேசனின் உறுப்பினர்களுடன் இந்துமதத் தலைவர்கள், ஆலைய தலைமைக் குறுக்களும் உட்பட கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான . அனஸ்ரி ராகல் செலஸ்தினா கணபதிப்பிள்ளை புவனேஷ்வரி ஆகியோருடன் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் 2019, 2020களில் வெள்ள அனர்த்த நிலமை

(ரக்ஸனா)

வடகீழ் பருவப் பெயற்சி ஆரம்பித்துவிட்டாலே மட்டக்களப்பு மாவட்டமக்களுக்கு வெள்ளஅனர்த்த பயமும் ஆரம்பித்துவிடும் எனலாம். இந்நிலையில் கடந்த வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் பாதிப்புக்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இருந்து எழுத்து மூலமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.



கடந்த 2019 ஆம் ஆண்டில் 19263 குடும்பங்களைச் சேர்ந்த 66673 நபர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அதில் 2 பேர் காயமடைந்திருந்தனர். அதன்போது 27 இடைத்தங்கல் முகாம்களில் 1285 குடும்பங்களைச் சேர்ந்த 4134 நபர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மேலும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 17978 குடும்பங்களைச் சேர்ந்த 62602 நபர்கள் உறவினர்கள் மற்றும் வேறு வீடுகளில் தங்கியிருந்தனர். இதன்போது 17885 குடும்பங்களைச் சேர்ந்த 60465 நபர்கள் பயனாளிகளதகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அக்காலப்பகுதியில் 20 நாட்கள் அரசாங்கத்தால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டிருந்தன.



2019 ஆம் ஆண்டில் சமைத்த உணவுகளுக்காக 1,750,898.36 ரூபாவும், பாதிக்கப்பட்ட உலர் உணவு வினியோகத்திற்காக 25,706,517.89 ரூபாவும், பொருட்களுக்காக 37,672. ரூபாவுமாக மொத்தமாக இம்மாவட்டத்தில் 27,495,088.25 ரூபா 2019 இல் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோல் இம்மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் 11281 குடும்பங்களைச் சேர்ந்த 35808 நபர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். மேலும் 4622 குடும்பங்களைச் சேர்ந்த 14631 நபர்கள் உறவினர்கள் மற்றும் வேறு வீடுகளில் தங்கியிருந்தனர். இதன்போது 4542 குடும்பங்களைச் சேர்ந்த 14374 நபர்கள் பயனாளிகளாத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அந்த ஆண்டில் உலர் உணவு வினியோகத்திற்காக 6,427,800 ரூபாவும், வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பிரதான வீதிப் போக்குவரத்து சேவைகளுக்காக 25,000 ரூபாவும், துண்டிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கான படகு சேவைகளுக்காக 156,784 ரூபாவும், வெள்ள நீர் தடைப்பட்ட பகுதிகளுக்கான ஜே.சி.பி, வேலைகளுக்கான கொடுப்பனவு 41,600 ரூபாவுமாக மொத்தமாக 2020 ஆம் ஆண்டில் 6,651,184 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், மாவட்டத்தில் வடகீழ் பருவகால நிலையினால் ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த திட்டம் மாட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டுள்ளதுடன் கடந்த 2019 மற்றும் 2020 ஆண்டு காலப்பகுதியில் இம்மாவட்டத்தில் எவ்வித உயிர் இழப்புக்களும், ஏற்படாத வகையில் முப்படைகளின் உதவியுடன், முன்னாயத்த நடவடிக்கைகள் அரசாங்க அதிபரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக மட்டக்களப்பு கச்சேரியில் இருந்து செயற்பட்டு வரும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.ஸியாத் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மில்லியன் கணக்கான நிதிச் செலவுகளும், இடம்பெயர்வுகளும். இன்னல்களும், அவற்றுக்கு ஈடுகொடுக்கும் செயற்பாடுகளும், வருடவருடம் இடம்பெற்று வருகின்றன. அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் பருவகால மழை வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் பொது மக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தம் தொடர்பாக ஆராயும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் விசேட கலந்துரையாடல் அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் மாவட்டத்தின் நிலமை அறிந்து வெள்ளஅனர்த்தத்தை தணிக்கும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்ற பட்சத்தில் இவ்வாறு வருடாந்தம் பல மில்லியன் ரூபா நிதி வெள்ள பாதிப்புக்களுக்கும், அதன் பின்னர் எற்படும் உட்கட்டுமானங்களுக்கும் செலவு செய்ய வேண்டிய நிலைமை குறைக்கப்படும் என சூழலியலாளர்களும், பொதுமக்களும் தெரிவிக்கின்றர்.



# மக்களை சூழ்ந்துள்ள இருளை அகற்றி, இனி மின்சூளம் ஏந்தி வருவோம்

## எம்.பி.இராதாகிருஷ்ணன் தேரிவிப்பு

(க.கிஷாந்தன்)

'தமிழ் முற்போக்கு கூட்டணியானது மின்சூளாக இனி ஒளியை பாய்ச்சும். உங்களை சூழ்ந்துள்ள இருளையும் அகற்றும். மூன்று கட்சிகளும் புரிந்துணர்வுடன் பயணத்தால் எதிர்காலமும் பிரகாசமாக இருக்கும்.' என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 300 மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை(04.12.2021) அட்டன் ஹைலண்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். ராம், மத்திய மாகாண மேலதிக கல்வி பணிப்பாளரும், அட்டன் வலய கல்வி பணிப்பாளருமான அருந்ததி சத்தியேந்திரா, பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன், அட்டன் ஹைலண்ஸ் கல்லூரியின் அதிபர் ஆர்.ஸ்ரீதர் மற்றும் ஹைலண்ஸ் கல்லூரியின் ஆசிரியர்கள் உட்பட ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இங்கு கருத்து தெரிவிக்கையில், 'ஒமிக்ரோன் என்ற புதிய வைரஸ் பிறழ்வும் உருவாகியுள்ளது. இந்நிலையில் உலக நாடுகள் திண்டாடுகின்றன. இலங்கையிலும் பல பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. குறிப்பாக பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. இதனால் மக்களின் வாழ்க்கைச்சுமையும் அதிகரித்துள்ளது. கோதுமா மா விலை உயர்வானது, பெருந்தோட்ட மக்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல 'கேஸ்' பிரச்சினையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. எந்நேரத்தில் எந்த பாகம் வெடித்து சிறதும் என தெரியவில்லை. இந்நிலைமைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களே பொறுப்புக்கூறவேண்டும். விஞ்ஞானப்பூர்வமான நடைமுறைகளை அவர்கள் முறையாக பின்பற்றியிருந்தால் இந்நிலைமையை தவிர்த்திருக்கலாம். இது மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, உறுதியான தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 'டோர்ச்' (மின்சூளம்) சின்னம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று 'பெட்டரிகளும்' இயங்கு நிலையில் இருந்தால்தான் மின்சூளத்தால் பிரகாசமாக ஒளியை பாய்ச்ச முடியும். அதேபோல கூட்டணியில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளுக்குமிடையில் சிறந்த புரிந்துணர்வு உள்ளது. 6 வருடங்களாக கூட்டணியாக பயணிக்கின்றோம். இனி மின்சூளம் ஏந்தி வருவோம். மக்களை சூழ்ந்துள்ள இருளை அகற்றி, ஒளியை பாய்ச்சும் விதத்தில் எமது பயணம் தொடரும்.' என்றார்.

# ஜனாதிபதி மற்றும் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் ஏன் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை

(க.ருத்திரன்)

இலங்கை ஜனாதிபதி மற்றும் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் ஏன் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என ஒரே நாடு ஒரே சட்டம் என்ற பரிந்துரைக் குழுவின் தலைவர் கலகொட அத்தே ஞானசாரதேரர் கேள்வி எழுப்பினார்.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருப்பொருளில் நடைபெற்ற நிகழ்வின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கடந்த 30 வருட காலமாக ஏழை மக்கள் தங்களது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமல் கண்ணீர் விட்டு வருகின்றனர். எனவே பல்வேறுபட்ட பிரச்சினைகளை திர்க்கவேண்டிய நிலை இருக்கிறது.யுத்த காலங்களில் வெளியேறியவர்கள் தமிழ்,சிங்களம்,முஸ்லிம் என்ற வேறுபாடு பார்க்காமல் அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டும்.ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலனிக் குழுவில் வழங்கப்படும் பரிந்துரைக்கு இன்று வாழைச்சேனைக்கு வந்தவுடன் திர்வு கிடைத்துள்ளதாக ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். இன்று; ஞானசாரர் தேரர் மற்றும் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட பரிந்துரைக்குழுவினர் வாழைச்சேனைக்கு வருகை தந்திருந்தனர்.வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது திம்புலாகல தேவாலங்கார தேரோ மற்றும் பிரதேச புத்திஜீவிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டு தங்களது தாங்கள் பிரதேசத்தில் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை முன்வைத்தனர். இதன்போது காணிப் பிரச்சினை, வீதி, பாலம், காணி எல்லை தொடர்பான விடயங்கள்.சிங்கள குடியேற்றங்கள் பொளத்த மத பாடசாலை அமைத்தல்.என பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன ஞானசாரதேரரின் வருகையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தாயின் உடல் பாகங்களை தானம் செய்ய முன்வந்த பிள்ளைகள்

## திருமலை போது வைத்தியசாலைக்கு வானூர்தி மூலம் விரைந்த விஷேட வைத்தியர் குழு

**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**





தாயின் உடல் பாகங்களை தானம் செய்ய முன்வந்துள்ள நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து விசேட வைத்திய குழுவொன்று ஹெலிகொப்டர் மூலம் சனிக்கிழமை விஜயம் செய்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை தனியார் கம்பெனியொன்றில் கடமையாற்றி வரும் சுத்திகரிப்பு தொழிலாளியாக கடமையாற்றி வந்த பெண் அதிக இரத்த அழுத்தம் காரணமாக நரம்பு வெடிப்பு காரணமாக அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் குறித்த பெண் செயற்கை சுவாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவரை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குடும்பத்தினருக்கு வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் உடலில் அனைத்து பாகங்களும் ஒழுங்காக செயற்பட்டு வருவதாகவும் தலையிலுள்ள நரம்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த பெண்ணின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இவரை காப்பாற்ற முடியாவிட்டாலும் இவரால் யாராவது நன்மை பெற வேண்டும் என்ற நோக்கில் குறித்த பெண்ணின் உடற் பாகங்களன சிறுநீரகம் மற்றும் இதயம் போன்றவற்றை தானம் செய்வதற்கு முன்வந்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் வேண்டுகோளின்படி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு தெரியப்படுத்தியதையடுத்து சனிக்கிழமை காலை கொழும்பிலிருந்து வைத்தியர் குழுவொன்று விஷேட ஹெலிகாப்டர் மூலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலாவெளி ஆறாம் கட்டை இரண்டாவது ஒழுங்கையில் வசித்து வந்த டி.சசிரேகா (41வயது) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் அனுமதியுடன் இரண்டு சிறுநீரகங்களுடன் , இருதயம் ஆகியவை பெறப்பட்டுள்ளதாகவும் விசேட வைத்திய குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கணவரை இழந்த நிலையில் இரண்டு பிள்ளைகளையும் வளர்க்கும் நோக்கில் திருகோணமலை பொது வைத்தியசாலை தனியார் சுத்திகரிப்பு தொழிலாளியாக கடமையாற்றி வந்த நிலையில் அதிக இரத்த அழுத்தம் காரணமாக நரம்பு வெடித்துள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இருந்தபோதிலும் குறித்த பெண் கடமையாற்றி வந்த தனியார் கம்பெனியின் மேற்பார்வையாளர் தேவையற்ற விதத்தில் தேவையற்ற வசனங்களை பாவித்து ஊழியர்களுக்கு ஏசுவதாகவும், சுகயீனம் என கூறினாலும் விடுமுறை வழங்காமல் வேலைக்கு அமர்த்துவதாகவும் இதனாலேயே இந்த பெண்ணுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டதாகவும் சக ஊழியர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறித்த பெண்ணின் உடற் பாகங்கள் தானம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. தனது தாயை காப்பாற்ற இயலாது போனாலும் இவருடைய உடற் பாகங்களை கொண்டு ஜீவிக்கும் எவராவது நன்மை பெறுவார்கள் அவர்கள் செய்யும் நல்ல காரியங்கள் தனது தாயை வந்தடையும் எனவும் பெண்ணின் பிள்ளைகள் குறிப்பிடுகின்றனர்.

# வற்றிப்போகிறதா டோலர் கையிருப்பு ? வறிதாகப்போகிறதா? அந்நியச் செலாவணி.

## ஜி. ஶ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,மட்டக்களப்பு



எமது நாட்டின் சர்வதேச வர்த்தகமான ஏற்றுமதிகள் இறக்குமதிகளுக்கான நாணயமாக இருப்பது டொலர்களாகும். இந்த டொலர் நாணயக் கையிருப்பானது இவ்வருட ஜனவரியில் 2.1 பில்லியன் டொலர்களாக இருந்தது. தற்போது அந்தக் கையிருப்பு 0.4 பில்லியன் டொலர்களிலும் குறைந்து விட்டதாக அறிய முடிகிறது. அந்த வகையில், சில வாரங்களுக்குத் தேவையான இறக்குமதிகளைச் செய்வதற்கான டொலர்களே அரசின் கையிருப்பில் உள்ளதாகவே அறியப்படுகிறது. இந்த நிலையில்தான் வரவு செலவுத்திட்டத்தை அடுத்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ச அவர்கள் இந்தியா சென்றுள்ளார். அங்கு அவர் 1.5 பில்லியன் டொலர்களைக் கடனாகப் பெறவுள்ளார் என்றும் ஊடகத் தகவல்கள் கூறின,தற்போது அவர் நாடு திரும்பியுள்ளார். கடன் கிடைத்ததா? என்பது தெரியவில்லை. அது கிடைத்தாலும் 5 மாதங்களாவது இறக்குமதிகளைச் செய்ய முடியும். ஏற்கனவே கடன் பொறியில் மாட்டியுள்ள இலங்கை அரசு பலகடன்களைக் குறுகியகால இடைவெளிக்குள் வட்டியுடன் முதலாகச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்குள் மேலும் மேலும் கடன்களைப் பெற வேண்டிய நிலையில் இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே தேசத்தின் சொத்துகள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளதாகப் பலத்த விமர்சனங்கள் எழுந்த நிலையில் கடனுக்குமேல் கடனென்ற நிலையில் இலங்கையரசு திண்டாடுகிறது. ஏற்றுமதிப் பொருளாதார வருவாய் குறைந்துள்ளது. ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால் இறக்குமதிக்காகச் செலவு செய்யயும் டொலர்களோடு ஏற்றுமதியால் கிடைக்கும் டொலர்கள் பாதியளவில்தான் காணப்படுகிறது. அதாவது ஏற்றுமதி வருவாய் இறக்குமதியிச் செலவின் பாதியளவில் தான் உள்ளது. வரவை விடச்செலவு இரண்டு மடங்காகவுள்ளது.சுற்றுலாத் துறை மூலம் கிடைத்த டொலர் வருமானம் கொவிட் 19 காரணமாக ஏறத்தாழ முழு அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதற்குள் ஜி எஸ் பி பிளஸ் வரிச்சலுகையையும் இழக்கும் நிலையில் இப்போதைய அரசாங்கத்தின் கடும் போக்குகள் காணப்படுகின்றன.

மூன்று முக்கியமான பதவிகளை வகிக்கும் ராஜபக்ச சகோதரர்கள் நாட்டின் டொலர் வருமான வீழ்ச்சியை என்னவென்று சமாளிக்கப் போகிறார்கள் என்பதே இப்போதைய கேள்வியாகும்.அவர்களும் தடுமாறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.ஜனாதிபது, பிரதமர் ஆகிய இருவரின் தடுமாற்ற நிலையை நிதியமைச்சராவது தீர்ப்பார் என்று பார்த்தால் அவராலும் முடியவில்லை. எனவே மூன்று முக்கிய சகோதரர்களும் பல்வேறு தோல்விகளின் பங்காளிகளாக்கப் பட்டுள்ளனர். அரசியல் சாணக்கியன் என்று எதிர்பார்க்கப்பட்ட பசில் ராஜபக்ச அவர்களும் கஜானா காலியான வேளையில் பதவியைப் பொறுப்பேற்று நிதிச்சங்கடத்துள் மாட்டிக் கொண்டுள்ளார். மேலும் ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் மறை ஒரு மில்லியனராக

(Minus One millionaire) மாறும் நிலை நெருங்கிவிட்டது. அதாவது ஒவ்வொரு குடிமகனும் ஒன்பதரை இலட்சம் ரூபாய் கடனாளியாக்கப் பட்டுள்ளார்.இந்த நிலையில் சேதனப் பசளை மூலம் ஒரு ஏக்கரில் 20 மூடைகள் நெல் விளைந்தால் ஒவ்வொரு விவசாயியும் மில்லியனராக மாறிவிடலாம் என்று மட்டக்களப்பு அபிவிருத்திக்குழுக் குழுத்தலைவர் பா.உ சந்திரகாந்தன் ஒருபுறம் கூறி வருகிறார். வார்த்தைகளில் அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. வயல்களிலோ வேறு வளப் பிரயோகம் மூலமாகவோ அபிவிருத்திகளைக் காணமுடியவில்லை.

இலங்கையில் பண நோட்டுகளை அச்சிடுவதன் மூலமாக டொலர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது மட்டும் உண்மை.நாம் டொலர்களை அச்சிட முடியாது என நுகர்வொர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.நாடெங்கே போகிறது கடனை நோக்கி நாமெங்கே போகிறோம் மைனஸ் மில்லியனரை நோக்கி என்பதைக் கையுயர்த்தும் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மாற்றுவழி கிடையாது. போக்கிடம் இதுவொன்றுதான்.




# புதிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர்

## ஜே.விபி எம்.பி விஜித ஹேரத் தேரிவிப்பு



**(க.கிஷாந்தன்)**

'இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய அதேபோல மக்களுக்கு சேவைகளை செய்யக்கூடிய அரசொன்றை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகி விட்டனர்.' என்று ஜே.வி.பியின் பிரச்சார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஊரிலிருந்து தொடங்குவோம் என்ற தொனிப்பொருளிலான மக்களுடானான உரையாடலும், துண்டுபிரசுர விநியோகமும் அட்டன் நகரில் இடம்பெற்றது.

நேற்று 05.12.2021 காலை 10.00 மணியளவில் அட்டன் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் மஞ்சுள சுரவீர, உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வியாபாரிகளிடமும், பொதுமக்களிடமும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த செயற்றிட்டமானது மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் கலந்து கொண்ட பின்னர் எரிவாயு அடுப்புகள் வெடிப்பு உட்பட சமகால நிலைவரங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

' நாட்டில் தற்போது எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறிவருகின்றன. இதற்கான காரணங்களை கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசு துரிதம் காட்டவில்லை. மாறாக எரிவாயு அடுப்பு வெடிப்புக்கும், எரிவாயு சிலிண்டருக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லையென ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுவருகின்றனர்.

தனது இயலாமையையும், பலவீனத்தையும் மறைப்பதற்காகவே இப்படியான கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். நாட்டில் ஏற்பட்ட மின் விநியோக துண்டிப்புக்கும் இதே பாணியில் தான் முட்டாள்தனமான கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். கேஸ் சிலிண்டர்களின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலேயே வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

அதேவேளை, சமையலறைக்கு சமைக்கு செல்லும் பெண்களுக்கு இன்று உயிருக்கு உத்தரவாதம் இல்லை. எந்நேரத்தில் வெடிப்பு சம்பவம் இடம்பெறும் என்ற அச்சம் உள்ளது. இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஆட்சியை உருவாக்குவதற்கு தமிழ், சிங்கம், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர். நாளை வேண்டுமானாலும் அவர்கள் இதனை செய்வார்கள்.' என்றார்.